

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்
## சித்திரை - வைகாசி

மலர் 11 மே - 2022 இதழ் 5

### பொருளடக்கம்


| | |
|---|---|
| ப்ரார்த்தனை | 3 |
| ஆசிரியர் பக்கம் | 5 |
| வண்டு ஸ்தோத்ரம்<br>பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | 7 |
| நீதிக் கதைகள்<br>பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | 10 |
| அனுக்கிரஹ பாஷணம்<br>பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | 13 |
| ப்ரஹ்மவித் ஆசீர்வாதம் 4 | 16 |
| ப்ரபோத சிந்தமாணி | 18 |
| வைகாசி மாத விசேஷ தினங்கள் | 20 |
| முகாம் நிகழ்ச்சிகள் | 21 |
| மானிடப் பிறப்பின் பயன் | 24 |
| அதர்வண வேதம் | 27 |
| சாம வேதத்தின் பெருமை | 35 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரீ | 39 |
| புராணக்கதை | 42 |
| மகாபாரத சுருக்கம் | 44 |
| ஸனாதன தர்மம் கேள்வி பதில்கள் | 46 |




भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


நிர்வாகக் குழு

ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்

டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்




ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


கௌரவ தலைமை ஆசிரியர் :

டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்
டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்
பேராசிரியர் S. ஸ்ரீநிவாஸ சர்மா
ஸ்ரீ T.N. ராமசந்திரன்
ஸ்ரீ T.S. ராகவன்
பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.
ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா
பேராசிரியர் K. ஸ்ரீநிவாஸன்



வெளியிடுவோர் :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்

அலுவலக முகவரி :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27233115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com

சந்தா விவரம்

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |

Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of
Sri Kanchi Kamakoti Peetam,
No1, Salai Street, Kancheepuram - 631502.
Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jai Ganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।
कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ப்ரார்த்தனை

# प्रार्थना

विदिताखिल शास्त्रसुधाजलधे महिथोपनिषत् कथितार्थ निधे ।
हृदये कलये विमलम् शरणम् भव शम्कर देशिक मे शरणम् ।। १



**விதிதாகில சாஸ்த்ர ஸுதாஜலதே மஹிதோபனிஷத் கதிதார்த்தனிதே ।**

**ஹ்ருதயே கலயே விமலம் ஸரணம் பவ சங்கர தேசிக மே சரணம் ।।**

*ஹே குரு புங்கவரே அம்ருதமயமான சாஸ்த்ரங்களின் கடலே மகத்தான உபனிஷத்துக்களின் தத்வ ஸ்வரூபமே என் இதயத்தில் உமது விமலமான சரணத்தைத் த்யானிக்கிறேன் . சங்கர தேசிகரே நீரே எனது புகலிடம்.*

करुणावर्णालय पालय माम् भव सागर: दु:ख विदूनक्रुतम् ।
रचयकिल दर्शन तत्वविदम् भव शम्कर देशिक मे शरणम् । २

**கருணாவருணாலய பாலய மாம் பவ சாகர துக்க விதூனக்ருதம் ।**

**ரசயாகில தர்சன தத்வவிதம் பவ சங்கர தேசிக மே சரணம் ।।**

*கருணைகடலே என்னை பவ சாகர துக்கத்திலிருந்து காப்பாற்றுங்கள். எல்லா தத்வ தர்சனத்தையும் காண்பியுங்கள். சங்கர குருவே நீரே எனது புகலிடம்.*

भवता जनता शुहिता भविता निजबोध विचारण चारुमते ।
कलयेश्वर जीव विवेकविदम् भव शम्कर देशिक मे शरणम् ।। ३ ।।

**பவதா ஜனதா ஸுஹிதா பவிதா நிஜபோத விசாரண சாருமதே ।**
**கலயேஸ்வர ஜீவவிவேகவிதம் பவ சங்கர தேசிக மே சரணம் ।।**

*உண்மையான ப்ரபோதத்தை அளித்ததால் ஜன சமூகம்  ஸுக்ருதம் ஆயிற்று. நான் யார் என்னும் விசாரணையின்  கொடுமுடியை தொட்டவரே  ஈஸ்வரன் ஜீவன் இவர்களின் விவேகத்தை எனக்கு அருளுங்கள். சங்கர குருவே நீரே எனது புகலிடம்.*

भव एव भावानिति मे नितराम समजायत चेतसि कौतुकिता ।
मम वारय मोहमहजलधिम्  भव शम्कर देशिक मे शरणम् ।। ४ ।।

**பவ ஏவ பவானிதி மே நிதராம் ஸமஜாயத் சேதஸி கௌதிகிதா ।**
**மம வாரய மோஹமயாஜலதிம் பவ ஸங்கர தேசிக மே ஸரணம்.।।**

*நீங்கள் தான் பரமேஸ்வரன் என்று புரிந்துகொண்டேன். என் மனதில் அதனால் உத்ஸாகம் பொங்குகிறது. மோஹமென்னும் பாழும் கடலிலிருந்து என்னைக் காக்கவும்.  சங்கர குருவே நீரே எனது புகலிடம்.*

**பிழை திருத்தம் ஏப்ரல்  இதழ்**

பக்கம் 35    நம: பலிவாய என்பதை  நம:சிவாய என்றும் அதே பத்தியில் இறுதி வரிக்கு முன்னால் பாந்தி ஹோமங்களில் என்பதை சாந்தி ஹோமங்கள் என்று வாசிக்கவும். தவறுக்கு வருந்துகிறோம்.   (ஆ.ர்)

# ஆசிரியர் பக்கம்

''ஞாயிற்றை சங்கிலியால் பிணைக்கலாமோ ஞான குருவின் புகழைச் சொல்லலாமோ'' என்று பாரதி பாடியது ஸ்ரீ சங்கர பகவத் பாதருக்குச் சாலப் பொருந்தும். 32 வயதில் நிகழ்த்தியச் சாதனைகள் பலப்பல. பேருண்மையான அத்வைத தத்வத்தை தன் ப்ரஸ்தானத் த்ரய பாஷ்யங்களால் உலகறியச் செய்தது மிகப் பெரியச் சாதனை. பக்தி, கர்ம, ஞான மார்கங்கள் மூன்றின் வழியாகவும் அத்வைதத்தைப் போதித்தவர். ப்ரஸன்ன கம்பீரமான தன் பாஷ்யங்கள் மூலம் சிக்கலான வேதாந்த விஷயங்களை தெளிவாக்கினார். பக்தி மார்க்கத்திற்கு அவர் ஆற்றிய பணி மகத்தானது. எல்லோரும் உத்தம அதிகாரிகள் அல்லர். சாதாரண பாமரங்கூட வழிபாட்டிற்கு அவரது ஸ்லோகங்களைச் சொல்லலாம்.

அவரது புகழ்பற்றி பேசிக் கொண்டிருந்தபோது ஒரு நண்பர் ''எல்லோரும் ப்ரஸ்தானத் த்ரயம் படிக்க முடியாது, கடினம் கூட. சாதாரணப் பாமரனுக்கு அவர் க்ரந்தம் எழுதியிருக்கிறாரா?'' என்று வினவ நாமும் யோசித்தோம். விடை உடனே கிடைக்கவில்லை. சற்று நேரத்தில் ஸ்ரீ சங்கரரே விடை தந்தார். (எமக்கு ஸ்புரித்தது) மோஹமுத்கரம் என்னும் பஜகோவிந்தம், ப்ரஸ்னோதர மாலிகா, ஆத்ம போதம்' இவையே அவை.

பக்தி க்ரந்தமான பஜ கோவிந்தத்தைத் தெரியாதவர் இருக்க முடியாது. அதம பக்ஷம் இரண்டு மூன்று ஸ்லோகங்களாவது தெரிந்திருக்கும். அதில் பக்தி மட்டுமல்லாமல் அத்வைத தத்வத்தை அழகாக கலந்து தந்திருப்பார். இது பற்றியே பெரிய கட்டுரை எழுதலாம். இரண்டாவது ஒரு மனிதனுக்குத் தேவையான ஆத்ம குணங்களைப் பற்றியும் லோகத்தில் அறத்தின்பால் எப்படி வாழவேண்டும் என்று கூறும் நூல். 66 ஸ்லோகங்களில் கேள்வி பதில் உருவில் தர்ம வாழ்க்கையை உபதேசித்திருப்பார்.

மூன்றாவதாக ஆத்ம போதம் என்னும் வேதாந்தக் க்ரந்தம். அத்வைதத்தை பாமரனும் புரிந்து கொள்ளும்படி நாம் தினம் காணும் நிகழ்ச்சிகளை உவமையாகச் சொல்லி விளக்கியிருப்பார். இந்த மூன்றையும் ஸ்ரீ சங்கரரின் ''க்ரந்த த்ரயம்'' என்று கூறலாம். ஜாதி, மதம், பால் வேறுபாடின்றி இதை அனுஸந்தானம் செய்வது உத்தமம் என்று நாம் நினைக்கிறோம்.

ப்ரம்மச்சாரி, க்ரஹஸ்தன் நிலையில் முதல் இரண்டையும் பணி ஓய்வுக்குப் பிறகு ஆத்ம போதத்தைப் பயிலலாம். வேத பாடசாலைகளில் வேதாந்தப் பரிசயம் செய்து கொள்ள இக்ரந்த த்ரயம் போதும். அதை அமல்படுத்த வேண்டுமென்பது எம் அவா. நண்பர் கேட்ட கேள்விக்கு ஸ்ரீ சங்கரர் மூலமாகவே விடை கிடைத்தது. யாருக்கும் வேதாந்தப் பரிசயம் அவஸ்யம் என்று ஸ்ரீ சரணர்கள் கூறுவர். எப்போதோ கிடைக்கப் போகும் மோக்ஷத்திற்கு இது தோரணவாயிலாக இருக்கும் என்பது எம் நம்பிக்கை.

அவைகளை பயிலப் பயில உண்மை தெளிவாகும் என்று கூறி இவ்விதழை ஸ்ரீசரணர்களின் பொற் பாதத்தில் ஸமர்ப்பிக்கிறோம்.

ஜய ஜய சங்கர ஹர ஹர சங்கர.



ஸ்ரீ மடத்தில் ஸ்வர்ண ரத சேவை ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் பிருந்தாவனத்தில் ப்ரதி மாதம் கீழ்கண்ட நக்ஷத்ரங்களில் நடைபெறும்

♦ அனுஷம் ♦ மூலம் ♦ உத்ராடம் ♦ அவிட்டம்

இந்த சேவையில் ரூபாய் 1000 செலுத்தி உபயதாரர்களாக கலந்துகொள்ள விரும்பும் பக்தர்கள் ஸ்ரீமடம் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புக்கு:**

ஸ்ரீமடம் மேனேஜர் - 044 - 27222115, 27222707, 27224236

இப்படிக்கு,
ஸ்ரீமடம் நிர்வாகம்

# வண்டு ஸ்தோத்ரம்

ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## அதிசய அந்தாதி



ஷட்பதீ ஸ்தோத்ரத்தில் ஒவ்வொரு ச்லோகத்திலும் ஒரு தினுஸான அழகு ரொம்பிக் கிடக்கிறது. நாலாவது ச்லோகத்தில் ஆசார்யாள் வார்த்தைகளைப் பின்னியிருக்கிற அழகு ஈடிணையில்லாமல் இருக்கிறது.

ஸாதாரணமாக, 'அந்தாதி' என்று ஒரு கவிதை வகையைக் கொண்டாடிச் சொல்கிறோம். 'ஸரஸ்வதி அந்தாதி', 'சடகோபர் அந்தாதி' என்றெல்லாம் கம்பர் பண்ணியிருக்கிறார். 'திருவாய் மொழி' எனப்படும் நம்மாழ்வாரின் ப்ரபந்தங்களில் பாசுரங்கள் முழுக்க முழுக்க அந்தாதி க்ரமத்தில் தான் இருக்கும். 'நாலாயிர திவ்ய ப்ரபந்தத்தில் முதல் மூன்று ஆழ்வார்களும் சேர்ந்து பகவத் தர்சனம் பெற்றவுடன் ஒருத்தருக்குப் பின் ஒருத்தராக அந்தாதிதான் பாடியிருக்கிறார்கள். தற்காலத்தில் 'அபிராமி அந்தாதி' ப்ரஸித்தமாகிக் கொண்டு வருகிறது.

'அந்த', 'ஆதி' என்ற இரண்டு வார்த்தைகளும் சேர்ந்து 'அந்தாதி' என்றாகிறது. 'அந்தம்' என்றால் முடிவு; 'ஆதி' என்றால் ஆரம்பம். ஆரம்பமும் முடிவும் இல்லாத பரமாத்மாவை 'ஆத்யந்த ரஹிதன்' என்று சொல்வது வழக்கம். 'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியை' என்று மாணிக்கவாசகர் 'திருவெம்பாவை'யை ஆரம்பிக்கிறார்.

'அந்தாதி' என்று ஒரு கவிதை வகைக்கு ஏன் பெயர் வந்தது என்றால் இதில் ஒரு செய்யுளின் அந்தமான (முடிகிற) வார்த்தையே அடுத்த செய்யுளின் ஆதி (ஆரம்ப) வார்த்தையாக வரும்.

உதாரணமாக, பெருமாளைப் பாட வந்த பொய்கையாழ்வார் 'முதல் திருவந்தாதி'யில் தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபத்தை ஸ்தோத்ரம் செய்யும் போது,

**ஆலமரநீழல் அறம் நால்வர்க்(கு) அன்(று) உரைத்த**
**ஆலம் அமர் கண்டத்(து) அரன்**

என்று ஒரு செய்யுளில் - 'அரன்' என்பதை 'அந்த' மான வார்த்தையாக முடிக்கிறார். இதற்கடுத்த செய்யுளில் ஹரி - ஹர அபேதத்தைச் சொல்கிறபோது, 'அரன்' என்ற இதே வார்த்தையை 'ஆதி' வார்த்தையாக வைத்து ஆரம்பிக்கிறார் :

**அரன் - நாரணன் நாமம் ஆன்விடை - புள் ஊர்தி**

என்றிப்படிச் சொல்லிக் கொண்டே போகிறார்.

இப்படி அந்தாதியாக ஒரு ஸ்தோத்ரத்தில் செய்யுள்களை மாலை மாதிரி கோத்துக் கொண்டே போவதில் ஒரு பெரிய ஸௌகர்யம், நாம் மேலே மேலே ஒவ்வொரு செய்யுளை நினைவு வைத்துக் கொண்டு மனப்பாடம் பண்ண ஸுலபமாகிறது. 'இந்தச் செய்யுள் 'அரன்' என்று முடிகிறதா? ஸரி, அப்படியானால் அடுத்த செய்யுள் 'அரன்' என்றுதான் ஆரம்பிக்கும்'' என்று நினைவு வைத்துக் கொள்ள முடிகிறது.

ஒரு செய்யுளின் அல்லது ச்லோகத்தின் முடிவை, அடுத்ததன் ஆரம்பமாக வைத்து அந்தாதி பாடுவதற்கு நிரம்பப் பாண்டித்யம் இருக்க வேண்டும். நம் ஆசார்யாளோ இதைவிடப் பல மடங்கு கஷ்டமான ஒரு ஸாதனையை 'ஷட்பதீ'யின் நாலாவது ச்லோகத்தில் அநாயாஸமாகப் பண்ணியிருக்கிறார். ஒரு ச்லோகத்துக்கும் இன்னொரு ச்லோகத்துக்கும் அந்த - ஆதித் தொடர்பு இருப்பதைவிட எத்தனையோ மடங்கு கடினமானதாக, ஒரே ச்லோகத்துக்குள்ளேயே ஒரு வார்த்தைக்கும் அடுத்த வார்த்தைக்கும் அந்த - ஆதித் தொடர்பு இருக்கிற விதத்தில் இங்கே பதங்களைக் கோத்துக் கொண்டு போயிருக்கிறார். அந்த ச்லோகத்தைச் சொல்கிறேன்.

**உத்- த்ருத நக - நகபி தநுஜ - தநுஜகுலாமித்ர - மித்ர சசி த்ருஷ்டே**
**த்ருஷ்டே பவதி**

- இதுவரை பதத்துக்குப் பதம் அந்தாதி க்ரமத்தில் வந்திருக்கிறது. ஆரம்பத்தில் 'உத் - த்ருத நக', இதில் முடிகிற 'நக' வையே அடுத்த பதத்துக்கு ஆரம்பமாக வைத்து நகபிதநுக இதன் அந்த்யமான தநுஜ'வை ஆரம்பமாக வைத்து இதற்கடுத்த பதமான 'தநுஜ குலாமித்ர'. இந்த ரீதியில் ரொம்பவும் ஆச்சர்யமாக ச்லோகம் போகிறது. ஒரு phrase

(சொற்றொடர்) முடிவில் வரும் வார்த்தை அடுத்த phrase ஆரம்பமாகிறது. ஒரு phrase முடித்து விடும் வார்த்தையை பிடித்துக்கொண்டு அடுத்த phrase ஆரம்பிக்கிறது. இறை 'முக்த பத க்ரஸ்தம்' என்பார்கள் . 'முக்த'-விட்ட 'க்ரஸ்த' -பிடித்துக் கொண்ட.

முதல் வரி முடித்துவிட்ட 'த்ருஷ்டே' வைப் பிடித்து கொண்டு இரண்டாவது வரியை 'த்ருஷ்டே பவதி' என்று ஆரம்பித்து, அப்புறம் இந்த 'பவதி' என்ற அக்ஷரங்களை பல தினுசில் திருப்பி,

**த்ருஷ்டே பவதி ப்ரபவதி ந பவதி கிம் பவதிரஸ்கார ॥**

என்று முடிக்கிறார். முழு ச்லோகத்தையும் சேர்த்துச் சொன்னால் ஒரு தைல தாரை பிசிர் இல்லாமல், முறிவுபடாமல் விழுகிற மாதிரி வார்த்தைக்குப் பின் வார்த்தையாகத் தானாகச் சேர்ந்து கொண்டே போகும்.

**உத்-த்ருத நக-நகபிதநுஜ தநுஜ குலாமித்ர மித்ர சசி த்ருஷ்டே ।**
**த்ருஷ்டே பவதி ப்ரபவதி ந பவதி கிம் பவதிரஸ்காராட ॥**

ச்லோகத்தின் உச்சாரண அழகு கெட்டுப் போகக் கூடாதென்று இங்கே சீர் பிரிக்காமல், ஸந்தி பிரிக்காமல் சொன்னேன். பிரித்துச் சொன்னால் 'நகபிதநுஜ' என்பது 'நகபித் 'அநுஜ' என்றாகும்; 'பவதிரஸ்கார:' என்பது 'பவ திரஸ்கார:' என்று இரண்டு வார்த்தைகளாகப் பிரியும்.

வார்த்தைகளை அழகாகக் கோத்துவிட்டால் போதுமா? இந்த நாளில் கூட ரொம்பவும் அடுக்குச் சொல் அலங்காரம் வந்துவிட்டது என்கிறார்கள். சொல் அடுக்கு அழகாக இருந்தால் மட்டும் ப்ரயோஜனம் இல்லை. அதன் அர்த்தமும் அழகாக, ஆழமானதாக இருக்க வேண்டும். இந்த ச்லோகத் தில் சொல்லழகோடு பொருளழகும் சேர்ந்திருக்கிறது.

(தொடரும்)

# நீதிக் கதைகள்


## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## நெல்லையப்பர்

நம்முடைய திருநெல்வேலி மாவட்டத்திலே பல வருடங்களாக ஜாதிக்கலவரங்களும் மதக் கலவரங்களும் நடந்து கொண்டுதான் இருக்கிறது. பேப்பரிலேஅன்றாடம் பார்க்கிறோம். அதனால்தான் நாங்களும் அடிக்கடி இப்படி வந்து கொண்டிருக்கிறோம்.

அப்படி இருந்தும்கூட, மக்களிடத்திலே விழிப்புணர்ச்சி இன்னும் வந்தபாடில்லையே...?

இதே சமயம் இந்த இடத்தில் இதற்குப் பதிலாக ஒரு ஜாதி மாநாடு போட்டிருந்தால்- அந்த ஜாதியைச் சேர்ந்த அத்தனை பேரும் வந்திருப்பார்கள். இன்றைக்கும் ஜாதிக்கு அவ்வளவு முக்கியத்துவம் இருந்து கொண்டுதான் இருக்கிறது. ஜாதிக் கூட்டம் நடக்கட்டும். ஈடுபாடு இருக்கட்டும். நல்லது தான். ஆனால் அதோடுகூட இந்து சமயத்திலும் ஒரு ஈடுபாடு காட்ட வேண்டும் என்றுதான் சொல்கிறோம். ஜாதிப் பற்றோடு சேர்ந்து சமயப் பற்றும் ஏற்பட வேண்டும் என்று தான் நாங்கள் ஆசைப்படுகிறோம்.



அவர்களிடம் பேசும்போது நான் சொன்னேன்: ‘நீங்கள் எல்லாம் தேவேந்திரர்கள். தேவர்களுக்கும் தேவேந்திரர்களுக்கும் பகை எப்போதும் வரக்கூடாது என்று நான் சொன்னேன் – ஒரு தமாஷாக.

அப்படி ஒரு ஒற்றுமை நம்மிடையே இருக்க வேண்டும் என்று சொன்னேன். அவர்களும் அப்போது ‘நாங்களும் அதைத்தான் விரும்புகிறோம்’ என்றார்கள்.

மூன்றாவது சக்தி அவர்களைத் தாக்கி, அதற்கு அவர்கள் பலியாகிவிடுகிறார்கள். அவர்கள் மீது வழக்கெல்லாம் போட்டு அவர்களையும் பிரித்து ஒதுக்கி விடுகிறார்கள்.

நம்முடைய தனிப்பட்ட கருத்தோ, ஜாதியோ ஒரு போதும் நம்மைப் பிரித்துவிடக் கூடாது என்பதுதான் எங்கள் கவலை.

எந்தச் சமயத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், எந்த வகுப்பினரைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், அவர்களின் வழிபாட்டு முறைகள் வேறாக இருந்தாலும் சமயத்தின் அடிப்படையில் ஒற்றுமையாக இருக்க வேண்டும்.

இந்த நிலையை நீங்கள் வகுத்துக் கொண்டு, நீங்கள் எல்லோரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும்.

இந்துப் பெருமக்கள் முதலில் இங்கு ஒற்றுமையாக இருந்தால்தான் உலகம் முழுவதும் ஒற்றுமையாக இருக்க முடியும்.

இங்குள்ள இந்து மக்களின் ஒற்றுமையில் பிளவு ஏற்பட்டு, அசாத்தியம் ஏற்பட்டால் உலகம் முழுவதும் அசாத்தியம் ஏற்பட்டு, பிரிவும் பிளவும் வந்து கஷ்டமும், துன்பமும் ஏற்படும்.

எல்லோருக்குமே சாத்தியப்படும் ஒரே நாடு நம் இந்திய நாடு, எல்லோருக்கும் சாத்தியப்படும் வழிபாட்டு முறை நம் இந்திய வழிபாட்டு முறை. எல்லோருக்கும் சாத்தியப்படும் சமயம் நம் இந்து சமயம்.

இதிலே ஒரு குழப்பம் வந்துவிட்டால் உலகம் முழுவதும் குழப்பம் வந்துவிடும்.

இது ஒரு பவர் ஸ்டேஷன் மாதிரி. இது ஒரு ஜெனரேட்டர் மாதிரி. ஒரு ஜெனரேட்டரிலிருந்து எவ்வளவு சப்-ஸ்டேஷன்களுக்கும் மின்சாரம் அனுப்பலாம். ஆனால் மெயின் ஜெனரேட்டரிலேயே கோளாறு வந்துவிட்டால் பிறகு சப்-ஸ்டேஷன் களுக்கு மின்சாரம் போக முடியாது.

எல்லா சமயத்திற்கும் மூலமானது, பழைமையானது நம் இந்து சமயம். நம்முடைய இந்து சமயத்திற்கு ஒருபோதும் குழப்பம் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

## ஒற்றுமை

இந்து சமயத்திற்கே ஆபத்தான சூழ்நிலை வந்து சண்டை சச்சரவுகளும் வந்து விட்டால், உலகில் வேறு எந்த சமயமும் நிலைத்து நிற்க முடியாது. ஆகவே இதனை உணர்ந்து கொண்டு நீங்கள் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும்.

நம்ம வீட்டுக் குழந்தையையும் பார்த்துக் கொள்ள வேண்டும். அடுத்த வீட்டுக்

குழந்தையையும் நன்றாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். நம்ம வீட்டுக் குழந்தையை மட்டும் பார்த்தால் போதும் என்று இருந்துவிடக் கூடாது.

ஒரு சமயத்தைப் பிரிவுபடுத்தியோ, அல்லது சேதப்படுத்தியோ, தங்கள் மதத்தை வளர்த்தால், நாளை அந்த மதத்திற்கும் இந்த நிலை வராது என்று சொல்ல முடியாது.

ஆகவே, இந்த நிலைமை யாருக்கும் தோன்றாமல் அவர்கள் எல்லோரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். முக்கியமாக செய்தித்தாள்களுக்கு நான் இப்போது ஒன்று மட்டும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஜாதி இந்துக்களுக்கும், அரிஜன இந்துக்களுக்கும் சண்டை என்று ஏன் போடுகிறீர்கள்?

(தொடரும்)

ஜய ஜய சங்கர உ ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

### சீடர்களின் கவனத்திற்கு

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும் சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச்சிறந்ததாகும்.

‘‘ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன்,
ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம்
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய
ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

### மெஹபூப் நகரில் பெரியவா இரண்டு நாள் யாத்திரை முடிவில்(19/04/2022) ஆற்றிய அருளுரை



இங்கு மெஹபூப்நகரில் நன்றாக காரியக்கிரமங்கள் நடந்தன. சந்திர மௌலீஸ்வரர் பூஜை, பாத பூஜை, தீப பூஜை நன்றாக நடைபெற்றன. சிலர் அக்ஷரப்யாசம் கூட செய்து கொண்டார்கள். அனைவரும் தீர்த்தப் பிரசாதம் பெற்றுக் கொண்டார்கள். இங்கே ஏகாம்பரேஸ்வரர் சுவாமி, அங்கே வெங்கடேஸ்வர சுவாமி. **சிவஸ்ய ஹ்ருதயம் விஷ்ணு, விஷ்ணோஸ்ச ஹ்ருதயம் சிவ**

இம்முகாம் அமைந்துள்ள சூர்யலக்ஷ்மி காட்டன் மில்ஸ் நிறுவனர் திரு. அகர்வால் அவர்கள் நன்றாக பார்த்துக் கொண்டு உள்ளார்கள். **வேதோ நித்யம் அதீயதாம்** என்று சங்கராச்சார்யர் கூறினார்கள். அதற்கு ஏற்ப, இங்கே பலர் வேதம் படித்து, பல இடங்களில் தர்மப் பிரச்சாரம் செய்கிறார்கள். இந்தப் பாலமூறு கேந்திரம், கடந்த முப்பது வருடமாக வேத பிரச்சாரத்திற்கு முக்கியமானதாக உள்ளது. வேத பவனில் இருந்து, வேங்கடராம கனபாடிகள் வந்து பரிக்ஷை நடத்தினார்கள்.

ஆர்.எஸ்.எஸ். VHP பிராம்மண ப்ரோஹித சங்கம், ஆந்திர வைஷ்ய சமூகம் எல்லாம் சேர்ந்து, ரத யாத்திரை போல், இந்த கார்யக்கிரமம் நன்றாக செய்து உள்ளீர்கள். பிரஜைகளுக்கு தர்மம், இப்பொழுது கோவில் உள்ளது. வேத பாடசாலை உள்ளது. பிரஜைகள் மத்தியில் அதிகம் தர்மப் பிரச்சாரம் செய்ய

வேண்டுமென்று, மூன்று விஷயங்கள் குறித்து இங்கு வந்து தர்சனம் செய்து கொண்ட மாவட்ட கலெக்டர் அவர்களிடம் உரையாடினோம்.

ஒன்று சில்ப பாடசாலை. கணபதி ஸ்தபதி அவர்கள் இந்தக் கோவிலை கட்டினார்கள். அவர் காஞ்சியிலும் பல கட்டியுள்ளார். மணி மண்டபம் அவர் கட்டினார். ஆந்திர தேசத்தில் நிறைய கோவில்கள் கட்டினார்கள். அவர் ஒய்வு எடுத்துக் கொண்ட பிறகு, காஞ்சிக்கு வந்து, சில்ப பாடசாலை முதலில் அமைத்தார். ஒய்வு பெற்றபின், காஞ்சியில் வீடு எடுத்துக் கொண்டு, சுவாமியின் சேவையில் இருக்க வேண்டும் என்று கருதி, அங்கேயே சேவை செய்தார்.

அங்கு, சில்ப பாடசாலையில். ஐந்து ஆறு வருடம் சில்பம் கற்றுத் தந்தார். இப்பொழுதும் அது தொடர்ந்து நடைபெறுகிறது. காஞ்சி பல்கலைகழகத்தில் அவர்களுக்கு சர்டிபிகேட் தருகிறோம்.

இரண்டாவது விஷயம் மங்கள வாத்தியம். நாதஸ்வரம், ஒரு பள்ளிக் கூடம் வைத்து, தெலுங்கு வழி மூலம் பள்ளி பயின்று, காலை மாலையில் கற்றுக் கொள்ள வேண்டும். இப்பொழுது எதற்கும் சர்டிபிகேட் வேண்டும் என்று கூறுகிறார்கள். நாளை வேலை, மற்றும் உபாத்யம் அனைத்திற்கும் சர்டிபிகேட் சௌகரியமாக இருக்கும்.

மூன்றாவது விஷயம் - விவசாயிகள். விவசாயிகளுக்கு ஆயுர்வேத ஞானம் முக்கியம். விவசாயிகள், ஒரு ஏக்கரில் விவசாயம் செய்கிறார்கள் என்றால், அவர்களுக்கு ஒரு பத்து சென்டில் கும்மிடிக்காய் பயிரிடுதல், மூலிகைகள் நடுதல் செய்து, ஆகார சுத்தம் சத்வ சுத்தம் ஆக இருக்க வேண்டும். அனைவரும் நன்றாக இருக்க வேண்டும். சுபிக்ஷம் வர வேண்டும். ஆரோக்கியம் இருக்க வேண்டும். ஆயுர்வேதம் விவசாயிகளுக்கு கற்பித்து, நன்றாக லேகியம் எல்லாம் தயார் செய்யலாம்.

தர்மப் பிரசாரத்திற்கு இந்த பாலமூர் நன்றாக பணி செய்து வருகிறது. நீங்கள் அனைவரும் எல்லா உதவிகளை செய்ய வேண்டும். தர்ம பிரச்சாரம் நமது குரு அவர்கள் இங்கு பல செய்தார்கள். நீங்கள் அனைவரும் தர்மப் பிரசாரம் செய்ய வேண்டும். இதைத் தவிர பரீக்ஷயா என்ற ஒரு திட்டம் உள்ளது. அது குழந்தைகள் அனைவருக்கும், பாரத விஞ்ஞானம், வாஸ்து, நாத, சாகித்யம், ஆகார பரிக்ஷயம், நமது தேசத்தின் சரித்திரம், வால்மீகி யார், காளிதாசர் யார், துளசிதாஸ் போன்ற மகான்கள் யார் என்று தெரிந்து கொள்ள, ஒரு knowledge தெரிய வேண்டும். சுவாமி அவர்கள் ஹரித்வாரில் சாதுர் மாசம் சமயம் அனைத்தும் செய்தார்கள். அச்சமயம் வருண போதம் - **அ என்றால்**

***அர்ஜுன்*** என்று ஹிந்தியில் புஸ்தகம் தயார் செய்தார்கள். கீதா பிரகாஷம் குப்தா என்றவர் புத்தகம் வெளியிட்டார். ஆங்கிலத்தில் A for Arjuna, B for Bheeshma, C for Cauvery, E for Ekalavya, L for Lakshmi, N for Narada என்று வெளியிட்டார்கள்.

இன்றைக்கு ஆங்கிலம் தேவை. அனைவரும் சொல்கிறார்கள். தெலுங்கில் பேசினாலும், நடுவில் centre என்று ஆங்கிலத்தில் கூறுகிறார்கள். சகஜமாக ஆங்கிலம், தெலுங்கு நடுவே வந்து விடுகிறது. ஆகவே பாரதீய விஸ்வாசம், விஞ்ஞானம், விகாசம் மூன்றும் ஒன்று சேர வேண்டும். அதற்கு முயற்சி செய்து வருகிறார்கள். இப்பொழுது ஹைதராபாத் செல்கின்றோம். அங்கே ஆதி சங்கரரின் ஜெயந்தி மே மாதம் 4,5,6 ம் தேதிகளில் நடைபெற உள்ளது. நூற்று ஐம்பதுக்கு மேல் வேத பண்டிதர்கள் படித்து முடித்து, certificate பெற்றுக் கொள்ள வருகிறார்கள்.

இங்கிருந்து காஷ்மீருக்கு வேத பண்டிட்கள் அனுப்பி வைக்கபடுகிறார்கள். பத்து வருடங்களாக அது நடக்கின்றது. ஐந்து ஆறு வருடங்கள் முன், நமது குரு அவர்கள் ஸ்ரீ நகரில் சங்கராச்சார்யா hill சென்று வந்தார்கள். அன்று முதல் விஷ்வ சாந்தி யக்னம் ஒவ்வொரு வருடமும் ரிக் வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் படனம், ஒவ்வொரு வருடமும், ஒவ்வொரு வேத படனம் நடைபெறுகிறது. இந்த வருடம் கூட, நமது மக்கள் அங்கு சென்று விஷ்வ சாந்தி யக்னம் செய்ய உள்ளார்கள். சுவாமிஜி அவர்கள் ஜம்முக்கு சென்று, 105 வயது நிரம்பிய காஷ்மீர் பண்டிட் காசிநாத் ஹன்ட் என்பவரை சந்தித்து, முன்னாள் ராஷ்ட்ரபதி வெங்கட்ராமன் அவர்கள் கூறியதின் பேரில், அமர்நாத் யாத்திரை செய்தார்கள். பலர் tourist ஆக செல்கிறார்கள். அமர்நாத் யாத்திரை எவ்வாறு செய்ய வேண்டும் என்று தெரிய வேண்டும். அங்கு இருபத்தி இரண்டு தீர்த்தங்கள் உள்ளது. அதைப் பற்றி புத்தகம் அச்சிட்டு உள்ளோம். அங்கு லவ்காஷி என்ற ரிஷி கூறியது போல் பூஜை செய்கிறார்கள். அதைப் பற்றிய புத்தகம், மஹாராஜா பிராதாப் சிங் அவர்கள் வெளியிட்டார்கள். கரன் சிங்கின் தந்தை ஹரி சிங், ஹரி சிங் அவரின் தந்தை பிராதாப் சிங். அந்த புத்தகம் எல்லாம் மறுபடியும் பிரசுரம் செய்து உள்ளோம். ஆகவே, இந்தப் பிராந்தியத்தில் பாலமூரில், நீங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தர்ம கேந்திரம் ஆக சேவை செய்ய வேண்டும். குருவின் அருளும், இறை அருளும், உங்களுக்கு கிடைக்கட்டும்.

# ப்ரஹ்மவித் ஆசீர்வாதம் 4

ஸ்ரீ வித்யாரண்ய ஸ்வாமிகள்

பி. ஆர். கண்ணன்

ஒவ்வொரு வாக்யம் முடிந்தவுடன்

**ஸ்ரீ சரணா: அனுக்ருண்ணந்து**

என்று சிஷ்யர்கள் கூறுவது ஸ்ரீ மடத்து ஸம்ப்ரதாயம்.

அஹம்காராத்மனோ: ஏகத்வப்ரமனிவ்ருத்தி ரூபோ அயம் க்ரந்திபேத: த்ருடீ பூயாத் ।। 21 ।।

*ஏகத்வத்தை நிரூபிக்கும் க்ரந்திபேதம் திடமாகட்டும்.*

ஆத்மா தேஹாதி வ்யதிரிக்தோ வா ந வா வ்யதிரிக்தோபி கர்த்ருத்வாதி தர்மயோகி வா ந வா அக்ர்த்வோபி தஸ்ய ப்ர்ஹ்மணா பேதோஅஸ்தி வா ந வா அபேதேபி தத்ஞ்யானம் கர்மாதிஸஹிதம் வா முக்திஸாதனம் கேவலம் வா ததாபி ஆத்மா ஸாக்ஷீ வா கர்தா வா ஸாக்ஷித்வேபி அஸ்ய ப்ர்ஹமத்வமஸ்தி வா ந வா ப்ர்ஹமத்வேபி ஸத்யபி தத் புத்தயா வேதிதும் ஸக்யதே வா ந வா ஸக்யத்வேபி த்த்வேதன மாத்ரேண முக்திரஸ்தி வா ந வா மம பரமார்த்தத: ப்ர்ஹ்மத்வே ஸத்யபி தாத்ருக்ரூபம் ஸாக்ஷாத் க்ருதம் வா ந வா ஸாக்ஷாத்க்ருதேபி இத:பரம் கர்தவ்யமஸ்தி வா ந வா கர்தவ்யாபாவேபி இதானீம் மம ஜீவன்முக்திரஸ்தி வா ந வா ஜீவன்முக்தத்வேபி வர்தமான தேஹபாதாந்தரம் விதேஹமுக்தி பவிஷ்யதி வா ந வா தத்ப்ராப்தாவாபி காலாந்தரே புனர்ஜன்ம பவிஷ்யதி வா ந வா இத்யாதி ஸர்வசம்ஸய நிவ்ருத்திர் பூயாத் ।। 22 ।।

*சாதகன் மனத்தில் பல ஐயங்கள் எழுகின்றன. தேஹத்திலிருந்து ஆத்மா வேறா இல்லையா/தனித்திருந்தால் கர்த்ருத்வம் உண்டா இல்லையா? இல்லையெனின் ஆத்மன் ப்ரம்மத்திலிருந்து வேறுபட்டதா இல்லையா? இரண்டும் ஒன்றே எனின் க்ரமத்தோடு சேர்ந்த அறிவு முக்திக்குக் காரணமா? ஆத்மா ஸாக்ஷியா? அப்படியெனின் ப்ரம்மமா? ப்ரம்மாயிருப்பின் புத்தியினால் அறியப்படுமா? அந்த நிலைதான் முக்தியா? ஜீவ ப்ரம்ம ஐக்யம் நேர்ந்தால் அதன்பின் கர்மங்கள் எந்த நிலை? கட்டாயம் செய்ய வேண்டிய கர்மாக்களைச் செய்தபின் முக்தி எங்கு கிடைக்குமா? ஜீவன் முக்தனுக்கு விதேஹ முக்தி எப்போது /அதன்பின் மறுபிறவி*

*உண்டா? இப்படி எழும் ஐயங்கள் அனைத்தும் நாசமடைய வேண்டும்.*

**அனாரப்தானாம் ஆகாமிஜன்மஹேதூனாம் அனேககோடி ஜன்மார்ஜிதானாம் ப்ராரப்த வ்யதிரிக்தானாம் ஸன்சித கர்மணாம் நிவ்ருத்திரூப; பரமபுருஷார்த: ஸம்யக் ஆவிர் பூயாத் ॥ 23 ॥**

*ப்ராரப்த கர்மாவைத் தவிர அநேக கோடி ஜன்மங்களால் சேர்த்து வைக்கப்பட்ட ஸன்ஜித கர்மாக்கள் நிவர்த்தியாக மோக்ஷமென்னும் புருஷார்த்தம் ஆவிர்பவிக்கட்டும்.*

**ய: பூர்ணானந்தேகபோத: தத்ப்ரஹ்மாஹம்ஸ்மீதி ப்ர்ஹ்மனுபவமாத்ர பர்யவாஸானே புத்தி நிரந்தரம் பூயாத் ॥ 24 ॥**

*ஆத்மன் ப்ரம்மனே என்பதில், நான் ப்ரம்மமயிருக்கிறேன் என்பதில் புத்தி நிரந்தரமாக இருக்கட்டும்.*

**யஸ்மின் காலே த்வைதபாவம் நாஸ்தி, நித்ராபி நாகச்சதி, தஸ்மின் காலே உப்லப்ய மானம் ய்த்ஸுகமஸ்தி ஸ ப்ரஹ்மானந்த இதி ப்ரஹ்மானுபவ ஸித்தி: நிரந்தரம் பூயாத் ॥ 25 ॥**

*நித்ரை இல்லாத நிலையில் த்வைத பாவம் இல்லாமல் ப்ரம்மானந்த அனுபவம் நிரந்தரமாக அமையட்டும். விளக்கம் ஜீவனுக்கு மூன்று நிலைகளுண்டு. ஜாக்ரத், ஸ்வப்னம், ஸுஷுப்தி . ஜாக்ரத் நிலையில் ஜீவனுக்கு ''விஸ்வன்'' என்றும் கனவு நிலையில் ''தைஜசன் என்றும் ஸுஷுப்தி நிலையில் ''ப்ராக்யன்'' என்றும் பெயர். இந்த மூன்று நிலைகளிலும் உண்மையான போதம் கிடையாது. நினைவு, கனவு நிலைகளில் அறியாமையுடன் த்வைத பாவம் உண்டு. ஸுஷுப்தி நிலையில் அவித்யை மட்டும் உண்டு. துரீயம் என்னும் நான்காவது நிலையில் ஆனந்தமே இருக்கும். இதுவே ஸமாதி நிலை எனப்படும். இந்த நிலையில் த்வைத பாவம் இல்லாமல் வெறும் ஆனந்த நிலை மட்டும் அனுபவிக்கப்படட்டும்.*

# ஸ்ரீமத் தேவி பாகவதம் -22

*பி. ஆர். கண்ணன்*

## ஸ்கந்தம் 11

**ஆசாரம்**



தன்னுடைய உதவிக்கு தர்மம் ஒன்றே வரும்; தாய், தந்தை, மனைவி, மக்கள் யாரும் உதவமுடியாது. தர்மத்தைக் கொண்டே துன்பத்தையும் அக்ஞானத்தையும் கடக்க முடியும். **ஆசார: ப்ரதமோ தர்ம: ஸ்ருத்யுக்த: ஸ்மார்த ஏவ ச ।** வேதத்திலும் சாஸ்த்ரங்களிலும் கூறப்பட்ட தர்மத்தைக் கடைப்பிடித்தலே தலையாய தர்மம். அதுவே ஆசாரம் எனப்படும்.

**ஸ்ருதிஸ்ம்ருதீ உபே நேத்ரே புராணம் ஹ்ருதயம் ஸ்ம்ருதம் । ஏதத்த்ரயோக்தஏவ ஸ்யாத் தர்மோ நாந்யத்ர குத்ரசித் ।।** வேதங்களும், சாஸ்த்ரங்களும் தேவியின் இரு கண்கள்; புராணமே ஹ்ருதயம். இம்மூன்றிலும் காணக்கிடைப்பதே தர்மமாகும்; வேறு எங்கும் தர்மம் கிடையாது. **ஆசாரஹீநம் । புநந்தி வேதா யதப்யதீதா ஸஹ ஷட்பிரங்கை: । சந்தாம்ஸ்யேநம் ம்ருத்யுகாலே த்யஜந்தி நீடம் ஸகுந்தா இவ ஜாதபக்ஷா: ।।** வேதங்களை ஷடங்கங்களுடன் கற்றுத் தேர்ந்தவனையும் ஆசாரமில்லாவிட்டால் அவ்வேதங்கள் காக்கமாட்டா. இறக்கை முளைத்தவுடன் பறந்து கூட்டைவிட்டு அகலும் பறவைகளைப் போன்று, வேதங்கள் மரணகாலத்தில் அவனை விட்டு ஓடும்.

தினமும் ப்ராம்ம முகூர்த்தத்தில் எழுந்து, வனஸ்பதியினால் பல் துலக்கி, விதிப்படி சௌசத்தைச் செய்து, ஆசமனம் செய்து, ப்ராணாயாமம், குருத்யானம், ப்ரம்மத்யானம் செய்து, ஸ்னானம், பித்ருதர்ப்பணம் செய்ய வேண்டும்.

## ருத்ராக்ஷம்

*மந்த்ரத்துடனோ, மந்த்ரமில்லாமலோ, வெட்கத்துடனாவது, ஒருவன் ருத்ராக்ஷத்தை பக்தியுடன் அணிந்துகொண்டால், ஸகலபாபங்களிலிருந்தும் விடுபட்டு, உயர்ந்த ஞானத்தை அடைவான். சிவன் சுப்ரம்மண்யருக்கு சொன்னபடி, த்ரிபுரஸம்ஹாரத்திற்கு முன் சிவன் அகோராஸ்த்ரத்தை த்யானித்து 1000 திவ்ய வருஷங்கள் கழித்து கண் திறந்தார். அவருடைய கண்களிலிருந்து கீழே விழுந்த கண்ணீர்த்துளிகள் ருத்ராக்ஷ வ்ருக்ஷங்களாக மாறின. வலது சூர்ய நேத்ரத்திலிருந்து உண்டான ருத்ராக்ஷங்கள் கபில வர்ணமுடையவை, 12 வகை. இடது சந்த்ர நேத்ரத்திலிருந்து உண்டானவை வெண்மையானவை, 16 வகை. மூன்றாவதான அக்னிநேத்ரத்திலிருந்து உண்டானவை கரிய நிறம் கொண்டவை, 10 வகை. வெண்மை உயர்ந்தது; கருப்பு உயர்ந்ததல்ல. ருத்ராக்ஷத்தின் முகம் ப்ரம்மா; மேல்பாகம் ருத்ரன்; கீழ்பாகம் விஷ்ணு. ஒரு முகங்கொண்ட ருத்ராக்ஷத்திலிருந்து, 14 முகங்கொண்ட ருத்ராக்ஷம் வரை தனித்தனியாகப் பலன்கள் சொல்லப்பட்டுள்ளன. ஒரு முகம்- சிவன்; இரு முகம்- சிவன், தேவி; அறுமுகம்- சுப்ரம்மண்யர்; 11 முகம்- ஏகாதச ருத்ரர்; 12 முகம்- த்வாதச ஆதித்யர்கள்; 14 முகம்- அரிது, சிரஸில் அணியவேண்டும், ஸாக்ஷாத் சிவனுக்கு ஸமமாவான். மாலை- ஐந்துமுக, ருத்ராக்ஷங்கள் 25 கொண்டிருந்தால் விசேஷம். ருத்ராக்ஷ தர்சனம், ஸ்பர்சம், தாரணம், ஜபம் - பிந்தியது மேலும் புண்யத்தைத்தருவது. தானம் மிகுந்த புண்யமளிப்பது.*

*ஒரு கழுதை விந்த்யமலையில் ருத்ராக்ஷ கனம் தாங்காமல் கீழே விழுந்து ப்ராணனை விட்டது. அப்போது அக்கழுதைக்கு சிவ ஸ்வரூபத்துடன்- மூன்று கண்கள், த்ரிசூலத்துடன் சிவலோகப்ராப்தி கிட்டியது.*

# மஹா பெரியவா பொன்மொழிகள்

1. *பூமியை விட்டுச் செல்லும் முன் 'என்னிடம் பாவமே இல்லை' என்னும் உயர்நிலையை அடைய முயற்சி செய்.*
2. *வாக்கு, மனம், உடல் இந்த மூன்றாலும் நற்செயலில் ஈடுபட்டால் தான் பாவத்தில் இருந்து விடுபட முடியும்.*
3. *நாம் நம்மால் முடிந்த நற்செயல்களைச் செய்து வந்தால் போதும். கடவுள் கைகொடுக்கத் தயாராக இருக்கிறார்.*
4. *பேச்சில் பெருந்தன்மையை வெளிப்படுத்தும் பலர், செயலில் சுயநலம் கொண்டவர்களாக இருக்கின்றனர்.*

# வைகாசி மாதம்
# ஸ்ரீ மடத்தில் - விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விபரம் |
|---|---|---|
| 15-05-2022 | ஞாயிறு | பௌர்ணமி பூஜா ஸ்வாதி வேத பாராயணம் |
| 16-05-2022 | திங்கள் | அனுஷம் தேர் |
| 17-05-2022 | செவ்வாய் | அனுஷம் வேத பாராயணம் |
| 18-05-2022 | புதன் | மூலம் தேர், ஸ்ரீ காஞ்சி விஜயேந்த்ர சரஸ்வதி ஸ்வாமிகள் ஆஸ்ரம ஸ்வீகார ஜயந்தி, மூலம் வேத பாராயணம் |
| 20-05-2022 | வெள்ளி | உத்ராடம் தேர், உத்ராடம் வேத பாராயணம் |
| 22-05-2022 | ஞாயிறு | அவிட்டம் தேர், அவிட்டம் வேத பாராயணம் |
| 26-05-2022 | வியாழன் | ஏகாதசி |
| 27-05-2022 | வெள்ளி | த்வாதசி, ப்ரதோஷ பூஜை |
| 10-06-2022 | வெள்ளி | ஏகாதசி |
| 11-06-2022 | சனி | த்வாதசி, ஸ்வாதி வேத பாராயணம் |
| 12-06-2022 | ஞாயிறு | ப்ரதோஷபூஜை, வைகாசி விசாகம் |
| 13-06-2022 | திங்கள் | ஸ்ரீஸ்ரீஸ்ரீ காஞ்சி மஹா பெரியவா ஜயந்தி பௌர்ணமி பூஜா, அனுஷம் தேர், அனுஷம் வேத பாராயணம் |
| 20-05-2022, 27-05-2022, 03-06-2022, 10-06-2022, | | வெள்ளிக்கிழமை பூஜை |

# முகாம் நிகழ்ச்சிகள்

சென்ற இதழ் தொடர்ச்சி



ஹாஸ்பெட்டில் வஸந்தநவராத்திரி உத்ஸவம் நடந்து வந்த சமயம் 06.04.2022 அன்று BALDOTA COLONY என்ற இடத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருக்கும் காமாக்ஷி அம்பாள் கும்பாபிஷேகத்தை ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் நடத்தி வைத்தார்கள். இந்தக் கோவில் காஞ்சியில் இருக்கும் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் கோவிலைப் போன்று கட்டப்பட்டுள்ளது இதன் சிறப்பாகும். யாகசாலை பூர்ணாஹுதி ஆன பிறகு கலசங்கள் ப்ரதக்ஷணமாக கோபுரம் மற்றும் விமானங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. ஸ்ரீ பெரியவாள் அவர்களே கும்பாபிஷேகத்தை செய்தார்கள். பிறகு கர்ப்பக்ருஹத்தில் மஹாபிஷேகமும் செய்தார்கள். அலங்காரம், அர்ச்சனை, நைவேத்யம் தீபாராதனை செய்யப்பட்டது. இந்த கோவிலை நிர்மாணித்த ஸ்ரீ ரங்கன் கௌடா குடும்பத்தினரை ஆசீர்வதித்து ப்ரஸாதம் வழங்கினார்கள். சாந்தூர் ராஜ குடும்பத்தினர், ஆனேகுன்டி ஸ்ரீ கிருஷ்ணதேவராயர் மற்றும் BALDOTA FAMILY, உள்ளூர் MLA ஆகியோர் இந்த கும்பாபிஷேக வைபவத்தில் பங்கேற்றனர். கும்பாபிஷேகம் முடிந்து ஹாஸ்பெட் முகாமிற்கு திரும்பிய ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் தொடர்ந்து 5ம் நாள் வஸந்த நவராத்ரி பூஜையை செய்தார்கள்.

10.04.22 அன்று ராமநவமி மஹோத்ஸவம் கொண்டாடப்பட்டது. சென்ற 9 நாட்களாக நடந்து வந்த ஆவர்ண பூஜா ஹோமம், ஸ்ரீ ராம சடாக்ஷரி ஹோமம், ஸ்ரீ வால்மீகி ராமாயண மூல பாராயணம், தவனோத்ஸவம் ஸ்ரீவித்யா ஹோமம் எல்லாம் பூர்த்தி செய்யப்பட்டது. ஸ்ரீ ராமருக்கு பட்டாபிஷேகம் செய்விக்கப்பட்டது. பட்டாபிஷேக சர்க்கமும் பாராயணம் செய்யப்பட்டது. ஸ்ரீ ராமநவமி அன்று ஸ்ரீ ராமர் அவதார கட்டமும் வாசிக்கப்பட்டது. வரதானம் செய்யப்பட்டது.

11.04.2022 அன்று அதிகாலையில் ஹனுமான் ஹல்லி எனும் இடத்தில் துவங்கப்படவுள்ள ஒரு தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டினார்கள். மாலையில்

ஹம்பியில் உள்ள ஸ்ரீ விருபாக்ஷேஸ்வரர் ஆலயத்திற்கு சென்று தர்சனம் செய்து கொண்டார்கள். அங்குள்ள வித்யாரண்யர் மடத்திற்கும் விஜயம் செய்தார்கள். ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் கோபுர வாசலில் பூர்ணகும்ப மரியாதையுடன் அழைத்துச் செல்லப் பட்டார்கள். ஸ்ரீ விரூபாக்ஷ வித்யாரண்ய ஸ்வாமி (வித்யாரண்ய மடத்தின் பீடாதிபதி) ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளை அழைத்துச் சென்று தர்சனம் செய்வித்தார்கள். முத்தாய்ப்பாக 1978/79ல் ஸ்ரீமஹாஸ்வாமிகள் ஹம்பியில் சாதுர்மாஸ்ய வ்ரதம் மேற்கொண்ட இடத்திற்கும் சென்று ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் பார்வையிட்டார்கள். பிறகு ஆனேகுன்டி ஸ்ரீ கிருஷ்ணதேவராயா க்ருஹத்திற்கும் விஜயம் செய்தார்கள். மூன்று கால பூஜையையும் முடித்துக் கொண்டு 12.04.2022 அன்று இரவு கங்காவதி சென்றடைந்தார்கள். கங்காவதிக்கு போகும் வழியில் Bhuta Guruphe Cross என்ற இடத்தில் உள்ள ஸ்ரீ வைத்யநாத ஸ்வாமி கோவிலுக்கு விஜயம் செய்தார்கள். கங்காவதியில் கொடுக்கப்பட்ட சிறப்பான வரவேற்பை ஏற்றுக்கொண்டு அனுக்ரஹ பாஷணம் அருளினார்கள். காஞ்சி மடத்தின் பக்தரும் நான்கு முறை பாராளுமன்ற உறுப்பினருமான ஸ்ரீ ராமுலு மற்றும் உள்ளூர் சட்டமன்ற உறுப்பினர்கள் உட்பட ஏராளமான மக்கள் பங்கேற்றனர்.

13.04.22 கங்காவதியில் உள்ள சரோஜம்மா கல்யாண மண்டபத்தில் மூன்று கால பூஜையையும் முடித்துக் கொண்டு அன்றே ராய்ச்சூர் சென்றடைந்தார்கள். ராய்ச்சூர் போகும் வழியில் சிந்தனூர் என்ற ஊரில் விநாயகஸ்வாமி கோவிலுக்கு விஜயம் செய்தார்கள். ராய்ச்சூரில் Seth Rikhabhchand Parasmal Sukhani PU College வளாகத்தில் பூஜைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

14.04.22 முதல் 17.04.22 வரை 4 நாட்கள் ஸ்ரீ சந்த்ரமௌலீச்ரவரர் பூஜை செய்தார்கள். 14.04.22 அன்று தமிழ் வருஷப்பிறப்பு சிறப்பாக கொண்டாடப்பட்டது. 17.04.22 அன்று மூன்று கால பூஜையையும் முடித்துக்கொண்டு அன்று இரவு மெஹபூப் நகர் வந்தடைந்தார்கள். 18.04.22 மற்றும் 19.04.22 ஆகிய இரு நாட்கள் மெஹபூப் நகரில் பூஜை. 19.04.22 அன்று மூன்று கால பூஜையை முடித்துக் கொண்டு அன்று இரவு ஹைதராபாத் வந்தடைந்தார்கள். ஹைதராபாத்தில் பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது. 20.04.2022 முதல் செகந்திராபாத் பத்மாராவ் நகரில் உள்ள ஸ்கந்தகிரி ஸ்ரீ சுப்ரமண்ய ஸ்வாமி ஆலயம், ஹனுமான் மந்திர் வளாகத்தில் பூஜை.

20.04.2022 அன்று மாலை ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி கோவில் கும்பாபிஷேகத்தில் பங்குபெற தமிழ்நாடு முழுவதிலிருந்து தேர்ந்தெடுத்து வரவழைக்கப்பட்டிருந்த சிவாச்சார்யார்களின் சதஸில் பங்கேற்று அனுக்ரஹ பாஷனம் செய்தார்கள். 66 ஹோமகுண்டங்களுடன் வைதீகமாகவும் லௌகீகமாகவும் ஜொலித்துக் கொண்டிருந்த யாகசாலையை பார்வையிட்டார்கள். 21.04.2022 அன்று காலை இரண்டு கால பூஜையை முடித்துக் கொண்ட 9.30 மணி முதல் 10.30 மணி வரை நடக்கவிருக்கும் ஸ்ரீ சுப்ரமண்ய ஸ்வாமி கோவில் கும்பாபிஷேகத்தில் கலந்துகொண்டார்கள். மூலவர் விமான கோபுரத்திற்கு தமது திருக்கரங்களால் கும்பாபிஷேகம் செய்து, கீழே வந்து ஸ்ரீ சுப்ரமண்ய ஸ்வாமிக்கும் மற்ற சன்னதிகளுக்கும் கலசாபிஷேகம் செய்தார்கள். அபிஷேகத்திற்குப் பிறகு பக்தர்களுக்கு தர்சனம் வழங்கினார்கள்.

25.04.2022 அன்று முகாமிலிருந்து சுமார் 40 கி.மீ. தூரத்தில் ஷம்ஷாபாத் மண்டலத்தில் உள்ள பொள்ளார் என்ற கிராமத்தில் புதிதாக நிர்மானம் செய்யப்பட்டிருக்கும் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் கோவில் கும்பாபிஷேகத்திற்கு முகாமிலிருந்து அதிகாலை 4.30 மணி அளவில் புறப்பட்டு அந்த ஊரை அடைந்து அங்கேயே ஸ்நானம் அனுஷ்டானங்களை முடித்துக் கொண்டு யாகசாலையில் பூர்ணாஹுதியில் கலந்து கொண்டார்கள். பிறகு தம்பதி பூஜை நடந்தது. கலசங்கள் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு அம்பாள் விமானம் தவிர பாலகணபதி, பாலசுப்ரமண்யர் விமானங்களுக்கும் அபிஷேகம் செய்யப்பட்டது. ஸ்ரீ பெரியவாள் புராதன விமானமான ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் விமானத்திற்கு தன் திருக்கரங்களால் அபிஷேகம் செய்வித்தார்கள். பிறகு மூலஸ்தானத்திற்கு கலசாபிஷேகம் செய்யப்பட்டு அனுக்ரஹ பாஷணத்திற்குப் பிறகு வந்திருந்த பிரமுகர்களும் உபயதாரர்களும் கௌரவிக்கப்பட்டார்கள். அங்கிருந்து புறப்பட்டு சுமார் 10 மணி அளவில் முகாமில் 2 கால சந்த்ரமௌலீச்வர ஸ்வாமி பூஜை நடைபெற்றது. இந்த வைபவத்தில் காஞ்சி பல்கலைக்கழக வேந்தர் ஸ்ரீ ஜெயராம ரெட்டி, ஸ்ரீ விஜயவாடா NTR மருத்துவ பல்கலைக்கழக துணைவேந்தர் DR. ரவிராஜு, TTD தர்மப்ரசார ரக்ஷண சபாவின் தலைவர் ஸ்ரீ கோவிந்த ஹரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து ஸ்ரீ சந்த்ரமௌலீச்வரர் பூஜையுடன் முகாம் செகந்திராபாத்தில் நடைபெற்று வருகிறது.

தொடரும்....

# மானிடப் பிறப்பின் பயன்

உலகத்தில் 84 லட்சம் யோனி பேதங்களும், நால்வகைப் பிறப்பும், எழுவகை தரங்களும் உள்ள கோடிக் கணக்கான உயிரினங்கள் உள்ளன. இவற்றில் இந்தப் பூவுலகத்தில் மனித இனம் மட்டுமே ஆறாவது அறிவைப் பெற்று விளங்குவதால் மற்ற உயிரினங்களைத் தனக்கு ஊழியம் செய்வதாகவோ, அடக்கி வாழ்வதாகவோ, செய்து கொள்வதுமல்லாமல் விஞ்ஞானத்தின் மூலமாக பல வசதிகளையும், பலவிதமான போகப் பொருட்களையும் உண்டு பண்ணி அவைகளை அனுபவிக்கிறது. ஆசை பேராசையாக உருவெடுத்து, வெறியாக, பித்தாக மாறி போகப் பொருட்களின் பின்னே செல்பவனாய் அதற்குரிய பொருள் சேர்ப்பதிலேயே குறியுடையவனாய் தீய வழிகளிலும், பிறருக்கு இடர்களை உண்டு பண்ணியும் கூட, தான் மட்டும் நன்றாக வாழவேண்டுமென்ற எண்ணத்துடன் சமய, ஆன்மீக ஈடுபாடு இல்லாமல் வெறும் விலங்கு வாழ்க்கையை வாழ்கிறான் மனிதன்.

விலங்குகள் போலும், பறவைகள் போலும் நாம் வாழ்வதானால், இறைவன் நமக்கு ஆறாவது அறிவைக் கொடுத்திருக்க மாட்டான். பல பிறப்புக்களில் செய்த புண்ணியச் செயல்களின் காரணமாகத்தான் இந்த கிடைத்தற்கரிய மானிட ஜன்மம் கிடைத்திருக்கிறது. இந்தப் பிறவியில் நாம் செய்யும் செயல்களின் மூலம் நமக்கு இந்தப் பிறவி முடிந்த பிறகு பிறப்பு இறப்பு இல்லா வீடு பேறு கிடைக்க வேண்டும். அப்படி இல்லையானால், அடுத்த பிறவி வீடு பேறு அடைய முயற்சிக்க வாய்ப்புள்ள மானிடப் பிறப்பே கிடைக்க வேண்டும். அந்த மானிடப் பிறப்பிலும் இப்பிறப்பைவிட சமய, ஆன்மீகத்தில் உயர்ந்த நிலையிலுள்ள மானிடப்பிறப்பு அடைய வேண்டும். இதற்கு வழி என்ன ?

வீடு பேறடைய வழிமுறைகள், சமம், தமம், த்யானம் முதலிய வழிகளில் உண்மைப் பொருளை அறிந்து ஒழுக்கத்தில் நின்று அனுபவத்தில் இறையோடு கலத்தல் ஆகும். இவ்வழியில் வெகு தீவிரமாகச் சென்றால் ஒரு பிறவியிலேயே வீடுபேறடைதல் இயலும். இதற்குத் துறவு மிகுந்த உதவியாயிருக்கும்.

மேற்படி வழிமுறையில், தங்கள் முன் பிறவி வாசனையின் இப்பிறவியில் அமைந்த சூழ்நிலையில், செல்ல முடியாதவர்கள் பல பிறவிகளில் முயன்று வீடு

பேறடைய முயற்சிக்க வேண்டும். அதற்கு இப் பிறவியில் செய்ய வேண்டிய செயல்கள் இஷ்ட தெய்வ உபாஸனையும், பரோபகாரமும் ஆகும். அவரவர் பூர்வ ஜென்ம வாசனைக்கியைந்த ஒரு இஷ்ட தெய்வத்தைப் பற்றி ஒரு தகுந்த குருவிடமிருந்து உபதேசம் பெற்று உயர்ந்த பட்சம் எவ்வளவு முடியுமோ அவ்வளவு நேரம் ஜபம், தியானம் செய்வது, இஷ்ட தெய்வ உபாஸனை. பரோபகாரம் என்பது பிற உயிரினங்களுக்கு நம் மனதால் (நினைப்பால்) சொல்லால், செயலால் உதவி செய்வது. செயலில் உழைப்பும், பொருளுதவியும் அடங்கும். நமது கவியரசு பாரதியார் அவர்கள் கலைமகள் பாட்டில், நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்! நிதி குறைந்தவர் காசுகள் தாரீர், அதுவுமற்றவர் வாய்ச்சொல்லருளீர், ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர் என்று மக்களுக்கு அறிவுறுத்துகிறார். பிறருக்கு உதவுதல் நமக்கு நன்மை பயக்கும். இது பற்றியே தெய்வப் புலவர் ஔவைப் பிராட்டியார், 'சாதி இரண்டொழிய வேறில்லை, இட்டார் பெரியோர் இடாதார் இழி குலத்தோர்' என்று கூறியிருக்கிறார். பட்டினத்தாரும் 'பிறக்கும் பொழுது கொடுவந்ததில்லை, பிறந்து மண்மேல் இறக்கும் பொழுது கொடுபோவதில்லை, இதன் நடுவில் குறிக்கும் இச்செல்வம் சிவன் தந்தது என்று கொடுக்கறியாமல் இறக்கும் குலாமருக்கு என் சொல்வேன் கச்சி ஏகம்பனே' என்கிறார்.

பிறப்புக்கும், இறப்புக்கும் இடையில் நாம் அடையும் செல்வத்தை, இறப்பின்போது நம்கூட வராத செல்வத்தை உயிருள்ள போதே நன் முறையில் இறை வழிபாடு செய்து கடமையைச் செய்வதுடன் பிறர்க்கும் பகிர்ந்தளித்து வாழ்க்கை நடத்தினால், அடுத்த பிறவி இதைவிட உயர்ந்த மனிதப் பிறவியாக வரும். இதற்குக் கண்ணபெருமான் கீதையில் உத்தர வாதம் அளித்திருக்கிறார்.

சுக முனிவர் தன் தந்தையாகிய வியாஸ முனிவரிடம் கூறினார். தந்தையே, தாங்கள் வேதங்களை நான்காகப் பகுத்தருளினீர், ப்ரஹ்ம சூத்ரம் எழுதினீர்கள், பதினெட்டு புராணங்களை இயற்றினீர்கள். இவற்றையெல்லாம் ஒருவன் தன் வாழ்நாளில் படித்து அதன் பொருள் உணர்வதற்கே பல ஆண்டுகள் ஆகுமே. அதற்குப் பிறகு அதன்படி வாழ்வது கடினமே. ஆகையால் எல்லோரும் அறிந்து கொள்ளும் வகையில் ஏதோ சில செய்யுட்களில் உட்கருத்தைச் சொல்ல வேண்டும்' என்று வேண்டினாராம். இதற்கு வியாஸர் கூறிய பதில் நாமெல்லாம் சிந்திக்க வேண்டிய ஒன்றாகும்.

''அர்த்த ஸ்லோகேஷு ப்ரவக்ஷ்யாமி யதுக்தம் க்ரந்த கோடிஷு

பரோபகார : புண்யாய பாபாய பர பீடனம்'

''அரைச் செய்யுளில் கோடிக் கணக்கான கிரந்தங்களில் சொல்லப்பட்ட கருத்தைச் சொல்கிறேன். பிறருக்கு உதவி செய்வது புண்யம், இடர் செய்வது பாபம்'.

பொதுவாக ஒரு மனிதன் செல்வம், சொல், வாக்கு, செல்வாக்கு முதலியவை பெற்று வசதியாக வாழ்ந்தால் மக்கள், அவன் முன் பிறவிகளில் செய்த பெரும் புண்ணியத்தின் பலனாக அப்படி இருக்கிறான் என்று சொல்லக் கேட்டிருக்கிறோம். புண்ணியம் என்பது பிறர்க்குச் செய்த உதவியின் பலன். அதனால் நமக்கு நன்மை கிடைக்கிறது, என்பது உலகறிந்த உண்மை. ஆக பிறர் நன்மை, நம் நன்மைக்கு ஆதாரமாக உள்ளது. அதாவது பிறர் நன்மையில்தான் நம் நன்மை உள்ளது. இப்படி எவ்வளவு பேர் சிந்தித்துப் பார்க்கிறார்கள்.

யஜுர் வேதத்தில் 'ந கர்மணா ந ப்ரஜயா தனேன த்யாகேநைகேவ அம்ருதத்வ மானசு'' என்று வருகிறது. இதற்குப் பொருள் வென்றால், பெரிய செயல்களினாலோ உயர்ந்த மக்களைப் பெற்றதாலோ பெரும் செல்வத்தைப் பெற்றதாலோ ஒருவனுக்கு அம்ருதத்வமாகிற வீடு பேறு கிடைப்பதில்லை. தியாகத்தினால் மட்டுமே (அதாவது பிறருக்காக ஈதல், உழைத்தல் முதலியவை ) ஒருவன் அதை அடைய முடியும் என்பதாகும்.

ருக் வேதத்தில் 'பரேஷா முபகாரார்த்தம் யஜ்ஜீவதி ஸ ஜீவதி'' என்று சொல்லப்பட்டிருக்கிறது. பிறருக்கு உதவுவதற்காக வாழ்பவனே வாழ்பவன்; மற்றவர்கள், உயிருந்தாலும் பிணத்திற்கு சமம் என்பது இதன் பொருளாகும்.

முடிவாக, இறையருளை நினைந்து நன்றியுடன் வழிபாடு செய்து, நல்வழிப் பொருளீட்டி, மனைவி மக்கள் மற்றவர்களுக்குரிய நம் கடமையைச் செய்து பிறருக்கு உபகாரமாக நாம் வாழ்க்கை நடத்தினால் நாம் நம் நற்பலன் பெற்று பல சித்திகளும் பெற்று முடிவில் வீடு பேறடைவதுடன் நாம் வாழுகின்ற சமூகமும் மேன்மையடையும்.

ஓம் தத்ஸத்!

**V.S. சங்கரன்,**

# அதர்வண வேதம்

## சாந்தி மந்திரம்



ஓம் பத்ரம் கர்ணேபி: ச்ருணுயாம தேவா: ।
பத்ரம் பச்யேமாக்ஷபிர் யஜத்ரா: ।
ஸ்திரைரங்கைஸ் துஷ்ட்டு வாக்ம்ஸஸ்தனூபி: ।
வ்யசேம தேவஹிதம் யதாயு: ।।
ஸ்வஸ்தி ந இந்த்ரோ வ்ருத்த ச்ரவா: ।
ஸ்வஸ்தி ந: பூஷா விச்வ வேதா: ।
ஸ்வஸ்தி நஸ்தார்க்ஷயோ அரிஷ்ட்ட நேமி: ।
ஸ்வஸ்தி நோ ப்ருஹஸ்பதிர் ததாது ।।
ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ।।

‘ஓம். தேவர்களே! காதுகளால் நாங்கள் நல்ல விஷயங்களைக் கேட்க வேண்டும். பூஜிக்கத் தகுந்தவர்களே! கண்களால் நாங்கள் நல்ல விஷயங்களைக் காண வேண்டும். உறுதியான அங்கங்களுடன் கூடிய உடலுடன் ஆயுள் முழுவதும் நாங்கள் உங்களைத் துதிக்க வேண்டும். உங்களுக்கு நன்மை செய்த வண்ணம் நாங்கள் வாழ வேண்டும்!‘

(-முண்டகோபநிஷத் சாந்திமந்திரம்)

‘அதர்வ அங்கீரஸ வேதம்‘, சுருக்கமாக, ’அதர்வ வேதம்’ என்றழைக்கப்படும். இது, ருக்கு, யஜுர், சாம வேதங்களுக்குப் பின்னால் வந்த வேதம் எனப் பரவலாக நம்பப்படுகிறது. ஆனால் சில வேத ஆய்வாளர்கள் இதை முதலாவதாகவும் கருதி முன்மொழிந்திருக்கிறார்கள். இவ்வுலக வாழ்க்கைக்கு வேண்டிய லௌகீக விஷயங்களையே அதர்வ வேதம் பெரும்பான்மை விதந்தோதுவது இதன் சிறப்பு. மற்றைய வேதங்கள் ஆன்மீக லாபத்திற்காகப் பெரிதும் குரல் கொடுப்பவை.

ருக்கு வேதம் - துதிப்பாடல்களையும், யஜுர் - சடங்குகளையும், சாமம் இசை ஒலி உடைய பாடல்களையும், கொண்டவை. ஆனால் அதர்வம், உலகியல் வாழ்விற்குத் தேவையான பல அடிப்படைப் பிரச்னைகளை ஆய்ந்து, அலசி, அதில்

உயர்வதற்குரிய வழியையும் மக்களுக்குப் போதிக்கிறது. இயற்கையின் சக்திகளை வசப்படுத்தி அவற்றின் ஆற்றலைப் பயன்படுத்தி மனிதகுலம் உய்வதற்கு வழிகாட்டும் 'நடைமுறை மறையாக' (Practical Veda) இது திகழ்கிறது. இதனைத் தொகுத்தவர், அங்கீரசரிஷி குலத்திலுதித்த அதர்வர்! அதர்வரே, முதன்முதலில் அரணிக் கட்டைகளை உரசி பூமிக்கு அக்னியைக் கொணர்ந்தவர். அதன் மூலம் தேவதைகளின் உறவை மனிதர்களுக்கு ஏற்படுத்தியவர்; அசுரர்களை அழித்தவர் என்றும் ருக்வேதம் இவரைப் போற்றுகிறது. இவருடைய சீடரான ப்ருகு மகரிஷி அதர்வ வேதத்தை வெளியுலகம் அறிவதற்குக் காரணமானவர். இந்த வேதத்தை மக்களிடையே பரப்ப அவர் செய்த முயற்சியின் அங்கீகாரமாக இந்த வேதத்தை 'ப்ருகு அங்கீரச வேதம்' என்று புவியோர் குறிப்பிட்டனர். அதர்வவேதம், ஆத்ம வேதம், அம்ருத வேதம், அங்கிரோ வேதம், பைஷஜ்ய வேதம், பிரும்ம வேதம் என்று இப்படிப் பலவிதமாக இந்த மறை குறிப்பிடப்பட்டது, இதன் இன்றியமையாமையும், புகழையும், வெளிப்படுத்தும்!

உலகில், நன்மையும், தீமையும் விரவியே இருப்பது இயற்கை என்பதனால், தீமையை விலக்கி, நன்மையை அடைய பெருமுயற்சி எடுத்துக்கொண்ட மறையே 'அதர்வம்'. சிஷ்டபரிபாலனத்திற்கு, துஷ்ட நிக்கிரகமும் ஏற்பட வேண்டியது தவிர்க்க முடியாத விஷயம்தானே! அந்த முறையில் இயற்கையின் பேராற்றல் மிகுந்த சக்திகளான பஞ்சபூதங்களைப் போற்றி, அவற்றின் வல்லமையை மனிதகுல மேம்பாட்டிற்காகப் பயன்படுத்தச் செய்த வேதமிது! அதே நேரத்தில், இயற்கையோடு முரண்பட்டு, மனிதகுலத்திற்கு ஊறு செய்யும் தீயசக்திகளை அழிப்பதற்கும், இந்த தெய்வங்களைத் துணைக்கழைத்து, மனதினாலும் வாக்கினாலும் முறையீடுகளை வலிமையாகச் செய்து நமது காரியத்தை வெற்றியடையச் செய்வதற்கு உரிய வழிகளை, அவை சற்று கடுமையாக இருந்தாலும், உபயோகிக்கும் வழிமுறைகளைச் சொன்னதும் இந்த வேதமே! மற்றைய வேதங்களிலிருந்து இது அதனால் வேறுபட்டது!

**'அந்தணர் என்போர் அறவோர்! மற்று எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்!'**

(குறள் 30)

என்ற நியதியை அனுசரித்து இந்த வேதத்திலுள்ள சில கடுமையான மந்திரப் பிரயோகங்களை, மறையவர்கள் அனுஷ்டிக்கத் தடையும் இருந்ததால், அதர்வ வேதத்தை அவர்கள் மற்றைய மூன்று வேதங்களைப் போல் போற்றி ஏற்றுக் கொண்டு அனுசந்தானம் செய்யவில்லை என்பதும் முக்கிய காரணம். இன்னொரு காரணம், பில்லி, சூனியம், ஏவலாதி துர்க் காரியங்களை போக்கும் மந்திரங்களின் உச்சாடனத்தைச் செய்யும் போது, அதற்குண்டான தற்காப்புகளையும் செய்து கொள்ளாவிடில், அவை, அப்படி மந்திரிப்பவரையே திருப்பித் தாக்கும் அபாயமும் இருந்ததால், மென்மையான குணமும், பயந்த சுபாவமும், இயல்பாகவே வாய்க்கப் பெற்றிருந்த பிராம்மணர்கள், முன்னாளில் இந்த வேதத்தை சிறப்பாக ஓதி பின்பற்றவில்லை என்பதும் நாம் ஒப்புக்கொள்ள வேண்டிய உண்மையாகும்!

'தருவம்' என்ற சொல்லுக்கு கடுமை, நெளிவுசுலுவு, வன்முறை என்று பொருள். 'அதர்வம்' அதற்கு நேர்மாறாக வன்முறையற்ற, மென்மையான, சலனமற்று நிலைத்த மனதைப் பெறுதலாகும்.

ஆகவே அதருவம் என்பது அச்சம் தரும் செயல்களற்ற தன்மையாகும். வாழ்வில் அச்சத்தை ஓட்டக்கூடிய வேதமென்பதால் இதற்கு 'அதருவவேதம்' எனப் பெயர் ஏற்பட்டது. தீயசக்திகளிடமிருந்து காத்துக்கொள்ள, தெய்வீக ரக்ஷையை (காப்பை)ப் பெற, பேய், பில்லி, ஏவல், சூன்யம் ஆகிய அமானுஷ்யத் தொல்லைகளிலிருந்து விடுபட, மந்திரங்களையும், வழிவகைகளையும் போதிப்பதால், அச்சத்தைத் தவிர்க்கும் அற்புத வேதமாக, இம்சைகளிலிருந்து காத்துக்கொள்ள, கை கொடுக்கும் நல்ல மறையாக 'அதர்வ வேதம்' பரிணமிப்பதை, சாதாரண மக்களைத்தவிர, படித்த பெருமக்களும் அச்சத்தைப் விலக்கவந்த வேதத்தை, அச்சத்துடன் அணுகாதிருந்ததும், இருப்பதும், நமது மக்களின் துரதிர்ஷ்டமே! அதர்வ வேதம் என்கிற அற்புத மாளிகையின் வாயிற்கதவைத் திறந்து, அதற்குள் நுழைந்து, அதிலமைந்துள்ள எழில் மிகும், அறிவு ததும்பும் ஆன்மீக, லௌகீக, ஆரோக்யம் தரும் நிதியங்களை

அனைத்து மக்களும் அறிந்து அனுபவிக்க, எடுத்துச்சென்றும் களித்து, இன்புற வாருங்கள்! என அன்போடு அழைக்கிறேன்!

அதர்வ வேதம் வலியுறுத்தும் மூன்று விஷயங்கள்: ஒன்று பிணிகளைத் தீர்த்து நிவாரணம் செய்யும் மருந்துகள்; இரண்டாவது நீண்ட ஆயுள் பெற வழிகளைக் கூறுதல்; மூன்றாவது பரம்பொருளை அறியும் மெய்ஞானத்தைப் புகட்டுவது.

அதர்வ வேதம்-ஓர் அறிவுச் சுரங்கம்; ஆரோக்கியப் பெட்டகம்; மனிதவாழ்விற்குற்ற மகிழ்ச்சி சாதனம்; ஆரோக்யம் தந்து பிணியகற்றும் மருத்துவன்; பிரும்மத்தை அறியத் துணைவரும் தத்துவ ஆசிரியன்; உலகின் தோற்றத்தையும், பஞ்சபூதங்களின் வல்லமையையும் எடுத்தியம்பும் பூகர்ப்ப விஞ்ஞானி; அச்சத்தை விரட்டி நெஞ்சில் துணிவை ஏற்படுத்தும் நல்லாசான்! மரணத்தைக் கண்டு அஞ்சாத, மனத்திட்பத்தை தரும் தானைத்தலைவன்; மேலே கூறிய அடைமொழிகள் எல்லாம் ஏதோ புகழுரையாகப் புகன்றதல்ல!

என்னுடன் கூட, சிரத்தையுடன், தெரியாதவற்றைத் தெரிந்து கொள்ளும் ஆவலுடன், ஆர்வமுடன், நேரம் ஒதுக்கி வருபவர்க்கு அதர்வ வேதத்தின் ஆச்சரியப்படத்தக்க மாண்புகளை, சிறப்பம்சங்களை, என் அறிவுக்கெட்டிய வரையில் காட்டுகிறேன். அடியேன்- வட மொழியில் வல்ல பண்டிதனில்லை. ஆனால் பக்தியுடன் படிக்கும் நல்ல மாணவன் ! என்னை நம்பி என்னோடு வாருங்கள்! அதர்வண வேதம் காட்டும் அற்புதங்களைக் காணலாம். இது ரிஷிகளின் தியானத்தில் வெளிப்பட்டதே தவிர அவர்களே சுயமாக இயற்றியதில்லை என்பது அறிந்து கொள்ளுங்கள்!

மேலே கூறியது அனைத்தும் உண்மை என்பதனை உணர்த்த அதர்வ வேதத்தைச் சேர்ந்த முண்டக உபநிஷதம் தரும் இந்தப் புனிதமிகு சுலோகத்துடன் இந்த முதல் அத்யாயத்தை நிறைவு செய்ய நினைக்கிறேன்.

**‘ஸத்யமேவ ஜயதே நான் ரிதம்**
**ஸத்யேன பந்தா விததோ தேவ யானः ।**
**யேனாக்ரமந்தி ரிஷயோ ஹி ஆப்த காமா**
**யத்ர தத்ஸத்யஸ்ய பரமம் நிதானம் ॥**
(முண்டகோபநிஷத்-சுலோகம் *3:1:6*)

இதன்பொருள்:

**'உண்மையே வெல்லும்;** உண்மையற்றதல்ல; ஆன்மீகப் பாதை, உண்மையாலேயே அமைந்துள்ளது. ஆசைகள் நிறைவேறப் பெற்ற முனிவர்கள், அதன் வழியாகவே செல்கிறார்கள்! உண்மையின் மேலான இருப்பிடம் அங்கேயே உள்ளது.'

'வாய்மையே வெல்லும்' என்கிற சத்ய வாக்கை ஆதாரமாகக் கொண்ட வேதம் அதர்வம்.

**யதா நத்ய: ஸ்யந்தமானா: ஸமுத்ரே குஸ்தம்கச்சந்தி நாமரூபே விஹாய ததா வித்வான் நாமரூபாத் விமுக்த: பராத்பரம் புருஷமுபைதி திவ்யம் ॥**

முண்டகோபநிஷத் (*3:2:8*)

'பெருகி ஓடுகின்ற நதிகள் தங்கள் பெயரையும், வடிவத்தையும் இழந்து கடலில் சங்கமிப்பதைப் போல, உண்மையை உணர்ந்தவன், தனது நாமரூபங்களை விடுத்து, உயர்ந்தவற்றுள் உயர்ந்தவரும், ஒளிவடிவானவரும் ஆன பரம்பொருளை அடைகிறான்!' என்ற முண்டக உபநிஷத் சத்யவாக்கின்படி, பிரும்ம வேதமாகிய அதர்வம் கூறுகின்ற உண்மைகளை உள் நுழைந்து அதன் சிறப்புணர்ந்து, மேலானவற்றைக் கடைப்பிடிக்கவும் வாசக அன்பர்களை அழைக்கிறேன்! வாருங்கள்!

ஓம் தத் சத்

வேதவியாச பகவான் நான்கு வேதங்களையும் முறைப்படுத்தித் தொகுத்து தமது சீடர்களான பைலா, வைசம்பாயனர், ஜைமினி மற்றும் சுமந்து ஆகியோருக்கு ருக்கு, யஜுர், சாம, அதர்வண வேதங்களைப் போதித்தார். 'அதர்வண வேதம்' என்ற உடனேயே, ஏதோ மந்திர தந்திர மாயாஜாலங்கள், பில்லி சூனிய ஏவல்கள், தீய செயல்களைச் செய்ய உதவும் கொடும் உச்சாடனங்கள் இவை மட்டுமே நிறைந்தது என்று மேலெழுந்தவாரியாக எண்ணி, அதைப் பற்றித் தவறாகவே பிரசாரங்கள் செய்ததோடு, அதனை மற்றைய மூன்று வேதங்களுக்கும் இணையாகக் கருதாமல் இழிவுபடுத்தி வந்த சில பழமை வாதிகளான வைதிகர்களின் சொல்லைக் கேட்டுச் சாதாரண பாமர மக்கள், இந்த வேதத்தைச் சரிவர அறிந்து கொள்ளாமலும், புரிந்து பயன்படுத்திக் கொள்ளாமலும் இருபதாம் நூற்றாண்டுவரை இருந்தது மக்களின் துரதிர்ஷ்டமே!

ஓர் அழகிய வனப்பு மிகுந்த மாளிகையில், குப்பை போடும்

கூடையும், அழுக்குத் துணிகள் சேர்த்து வைக்கும் பெட்டியும், கழிப்பறையும் உள்ளதுபோல், மனிதனுக்குச் சிற்சில நேரங்கள் ஏன் பலசமயம் தேவைப்படும் மந்திரதந்திர சமாச்சாரங்களும் அதர்வ வேதத்தில் அடங்கியுள்ளது. அது அந்த வேதத்தின் புனிதத்தை எள்ளளவும் குலைத்து விடாது. இன்னொரு முக்கிய ரகசியம், அதர்வ வேதத்தில் காணப்படும் உச்சாடனங்கள், மன ஒருமைப்பாட்டுடன், சக்திமிகுந்த வார்த்தைகளை, மீண்டும் மீண்டும் கூறி அதன் மூலம் காரியசித்தி அடையும் மனோவசியக்கலை என்கிற 'ஹிப்னாடிசம்' போன்ற அடிப்படையில் அதற்கும் மேலான சக்தியாக அமைந்துள்ளதை மனோதத்துவ நிபுணர்கள் உணர்வர். முழுமனதுடன் அந்த வாக்கியங்களைத் திரும்பத் திரும்ப ஒலிக்கும்போது, வில்லின் நாணை இழுத்துவிட்டது போல் அது வலிமை பெற்று மந்திர ஒலியாக மாறி நினைத்ததை முடித்து வைக்கிறது என்பதை நமது முன்னோர்களான ரிஷிகள் உணர்ந்து அவற்றைத் தேவையான போது, பயன்படுத்தும்படி, கூறிச்சென்றனர். இன்னொன்று; 'எழுதாக் கிளவி'யாக வேதம் இருந்ததால், அவர்கள் ஓராண்வழி உபதேசமாகக் கூறிய வேதமந்திரங்கள்அப்படியே தகுதியும் பொறுப்பும் உடைய சீடர்களால் உபதேசமாக வாங்கிக் கொள்ளப்பட்டு, மக்களின் நல மொன்றே குறிக்கோளாகக் கொண்டு பயன்படுத்தப்பட்டன. அவை தீயவர்கள் கையில் சென்றடையாததால், இதனால் சமுதாயத்திற்கு எந்தவித பாதிப்பும் இல்லாமல் இருந்ததும் இங்கே எண்ணத்தக்கது.

‘பாவமே! எங்களைவிட்டு விலகிவிடு; இல்லாவிடில் நாங்கள் உன்னை விட்டு விலகிவிடுவோம்!‘ என்று எவ்வளவு நெஞ்சுரமோடு வேதகால மக்கள், ‘தீயவை தீய பயத்தலான் தீயவை-தீயினும் அஞ்சப்படும்!‘ என்கிற தமிழ்மறைக் கிணங்க, பாவங்களை விட்டு நீங்கிடவும், 'நல்லன யாவையும் நாடுவோராகவும்' அறத்தோடு வாழ்ந்து சிறந்ததை, அதர்வ வேதம் தெற்றெனப் புலப்படுத்தும்! ஆயுள், ஆரோக்கியம், (பிரும்ம) ஆனந்தம் ஆகிய மூன்றையும் பெறுவற்குரிய ராஜ பாட்டையை இந்த வேதம்தான் காட்டுகிறது என்பதைத் துணிந்து கூறலாம்!

ஒரு பறவையின் பார்வையில் (Bird's eye view) நாம் நோக்கினால், அதர்வ வேதத்தின் பொருளடக்கத் தலைப்புகளிலிருந்தே, அதிலுள்ள விஷயங்கள் என்னவென்று தெரிந்து கொள்ளலாம். தெளிந்த ஞானமும் அறிவும் உடலில் மன்னி விளங்க முதலில் வாக்குத் தெய்வமான வாசஸ்பதியை வணங்கி, அதர்வரிஷி வேதத்தைத் தொடங்கி வைக்கிறார். அவரை அடியொற்றிப் பல ஞானிகள், எடுத்துக்கொண்ட தலைப்புக்களைப் பார்த்தாலே விளக்கம் கிடைக்கும். அவையனைத்தும் தெய்வீக அருளால் அவர்கள் மூலமாக தோன்றி வெளிவந்தவை!

குடும்ப ஒற்றுமை, உழவு, மழை, விளைச்சல், நீண்ட ஆயுள், தீர்க்காயுசு, பசுச் செல்வம், அச்சத்திலிருந்து விடுதலை பெற, குடும்ப வாழ்க்கை, திருமணம், பிணிநீங்க, மணிமந்திர ஔஷதங்கள், பிரம்மநிலை, உயர்ந்த செயல்கள், பகல் இரவு, சூரியன், இந்திரன், பிரம்மசரியம் - உபநயனம், மூலிகைவளம், தர்ப்பை, சரஸ்வதி, இலா, உஷை, அஸ்வினி தேவர்கள், அக்னி, விஷ்ணு, சோமன், பர்ஜன்யன், மித்ரன் வாயு, தேவர்கள், கந்தர்வர்கள் ஆகிய தேவதாஸ்வரூபங்கள், ப்ரணவம், பிரம்மம், பரமாத்ம-ஞானம், ஐக்கியபாவம், மன்னன், இராஜ்யாபிஷேகம், குருசிஷ்யன் உறவு, கணவன்-மனைவி உறவு, பாவமன்னிப்பு, கடன் தீர ப்ரார்த்தனை, ஒற்றுமை ஓங்கிட, பகைதணிய, மோட்ச நிலை, பூமித்தாயின் பொறை மற்றும் சிறப்பு இப்படி எண்ணற்ற தலைப்புக்களில் பல்வேறு விஷயங்களைப் பல முனிவர்கள், உள்ளுணர்வால் உணர்ந்து சூக்தங்களாக அவற்றை வெளிப்படுத்தியுள்ளனர்.

அதர்வ வேத சம்ஹிதையில் மொத்தம் 20 காண்டங்கள் உள்ளன; 760 அதிகாரங்களும், சுமார் 6000 பாடல்களும் (மந்திரங்கள்) கொண்டு விளங்குகிறது. இது கிரிஃபித் அவர்கள் தமது நூல் முன்னுரையில் கூறியபடி) அறிஞர் எம். ஆர். ஜம்புநாதன் கொடுத்துள்ள அட்டவணைப்படி சூக்தங்கள் 731; மொத்த மந்திரங்கள் 5,848, விட்னி 5038 என்று தெரிவிக்கிறார். சில சம்ஹிதைப் பதிப்புகளில் அது 5987 வரை உள்ளது. சூக்தங்கள் 759 உள்ளன.

ஆச்சார்ய சாயனர் எழுதியுள்ள பழைய உரை மிகப் பிரசித்தமானது. 1895-98, 1929, 1960-64 ஆண்டுகளில் மேற்படி உரை பதிப்பிக்கப்பெற்று வெளிவந்துள்ளது. மேனாட்டறிஞர் ஆர். டி. எச். கிரிபித்

*1895-96* ஆங்கிலத்தில் அதர்வண வேத மொழி பெயர்ப்பும், வில்லியம் டிவைட் விட்னி *1905*லும், ப்ளூம் பீல்டு என்பவரால், 'மாக்ஸ்முல்லர்' பதிப்பித்த ஒரு பதிப்பும் வெளிவந்துள்ளன. ஓட்விக் மற்றும் ஜே. கிரில் இதனை ஜெர்மானிய மொழியிலும் மொழியாக்கம் செய்து வெளியிட்டுள்ளனர். அண்மைப் பதிப்புக்களில் விட்னி மற்றும் சாயனாச்சாரியார் உரையின்படி கே. எல். ஜோஷி அவர்கள் பதிப்பில் 2004-ம் ஆண்டு டில்லியிலிருந்து வெளிவந்துள்ளது. ('Atharva Veda Samhita &" Whitney & Sayana Edited by K. L. Joshi & Introduction) ஆர்.டி. கிரிப்பித் ஆங்கில மொழியாக்கமும், தமிழில் மா. ரா. ஜம்புநாதன் மொழி யாக்கமும் செய்து, 2006-ம் ஆண்டு அலைகள் வெளியீட்டகம், (சென்னை) மூலமாக வெளிவந்துள்ள அதர்வ வேதம் தமிழ் - ஆங்கில நூலும் குறிப்பிடத்தக்கது. மேலும் அரவிந்தர் கபாலி சாஸ்திரி இன்ஸ்டிடியூட், பெங்களூரிலிருந்து ஆர்.எல். காஷ்யப் இயற்றியுள்ள சிறிய கையடக்கமான ஆங்கில நூல்கள் 2004-2006ல் வெளிவந்துள்ளன. இவையும் அதர்வ வேதத்தை அறிமுகப்படுத்தும் சிறந்த நூல்களாகப் பரிணமிக்கின்றன.

நான்மறைகளில் ருக்குவேதம் துதிப்பாடல்களையும், யஜுர்-சடங்குகளையும், சாமம் இசை ஒலி தழுவிய பாடல்களாகவும் விளங்குவன என ஏற்கனவே கூறினோம். நான்காவதான அதர்வம், மனிதனின் லௌகீக வாழ்க்கைக்கு இன்றியமையாத மருத்துவம், உடல் ஆரோக்கியம், ஆயுள், பொருள் அபிவிருத்தி, குடும்ப நன்மை மற்றும் ஒற்றுமை, பகைவரிடமிருந்து பாதுகாப்பு, பிணிக்கு நிவாரணம், அகால மரணத்தடுப்பு போன்ற அன்றாட வாழ்வின் அவசியமான விஷயங்களுக்கு பஞ்சபூதபரமான இறையின் சக்திகளை வேண்டி, இவை சீர்பெற வேண்டுதலைச் செய்வதைப் பிரதானமாகக் கொண்டிருப்பதால், இதை 'மக்கள் வேதம்' என அழைப்பது மிகப் பொருத்தமாகும்!

நன்றி

**அதர்வ வேதம் அருளும்**

ஆனந்த வாழ்வு

# \õ© ÷Áuzvß uÛa]Ó¨ ¦

ஸ்ரீ N. நீலபால சர்மா M.A.,
மீமாம்ஸா & வேதாந்த சிரோமணி

## 1. சாமவேத வந்தனம்

ओं नमः सामवेदाय नारदादि ऋषिभिः ।

## 2. வேதமே ப்ரமாணம்

வேதமே நமக்கு ப்ரமாணம். வேதத்தை வழியாகக் கொண்டு நல்வழி காட்டும் குருவே ப்ரமாணம். வேதத்தினால் சொல்லப்படும் தர்மமே நல்வழி. வேதத்தினால் போற்றப்படும் தெய்வமே தெய்வம்.

## 3. வேதத்தினால்தான் தெய்வத்தை அறியலாம்

வேதங்கள் நான்குமே சமம். நான்கு தலை உடைய ப்ரம்மா வேதத்தின் ஸ்வரூபம். ''வேதமயோ விதாதா'' என்கிறது ஸ்ரீமத் பாகவதம் (3வது ஸ்கந்தம் 15வது அத்யாயம் 8வது ச்லோகம்) तल्लोकपद्मं स उ एव विष्णुः என்று உலகையே நாராயணனின் நாபிகமலத் தாமரையாகவும், तस्मिन्स्वयं वेदमयो विदाता என்று ப்ரஹ்மாவை வேதஸ்வரூபமாகவும் சொல்கிறது. வேதத்தை கொண்டே ஆதி நாராயணனை அடையமுடியும் என்பதால் தெய்வத்திற்கும் வேதமே ப்ரமாணம். வேதத்தினால் தான் பகவானையும் அறியலாம். அது போல் வேதமே பகவான் वेदो नारायणः साक्षात् शुश्रुम ॥ (श्रीमद्भागवतं 6-1-40) என்றும் சொல்லப்படுகிறது.

## 4. சாமவேதத்தில் பகவானின் விருப்பம்

அந்த வேதங்களிலும் ஸாமவேதம் மிகச் சிறந்ததாகச் சொல்லப்படுகிறது. ஸாமகான லோலன் என்று பகவான் எல்லாப் பெரியோர்களாலும் கூறப்படுகிறார். ராவணன் பரமேச்வரனை சாமவேதத்தினாலேயே வசம் பண்ணியது உலக ப்ரஸித்தம். மஹரிஷிகளும் பகவானை उरुगायस्य विष्णोः என்று ஸாமவேதத்தினால் சந்தோஷப்படுத்துவதை வேதமே சொல்கிறது.

वेदानां सामवेदोऽस्मि (गीता 10-22) என்று பகவத் கீதை விபூதி யோகமும் சொல்கிறது. அதிலும் बृहत्साम तथा - साम्नां (गीता 10-25) என்கிறது. ப்ருஹத் சாமம் மஹாவிஷ்ணுவிற்கு உகந்தது. பகவானின் முக்யமான ஓர் வைபவமாக இருப்பதால் சாமவேதமே சிறந்தது.

## 5. சாமவேதத்தில் சிவ-விஷ்ணு பூஜை

ரதந்தர சாமம் சிவனுக்கு உகந்தது. ப்ருஹத் சாமம், ரதந்தர சாமம் இரண்டுமே கருடன் உருவில் உள்ள வேத புருஷனின் இரு இறகுகள், ''ப்ருஹத் ரதந்தரே பக்ஷௌ' (बृहदथन्तरे पक्षो) என வேதம் சொல்கிறது.

स्वर्णघर्मानुवाकेन महापुरुषविद्यया ।
पोरुषेणापि सूक्तेम सामभी राजनादिभि: ।।

श्रीमद्भागवतम् -11-27-39.

என்று பகவானின் அபிஷேக பூஜா காலங்களில் ராஜனம் ரௌஹிணம் போன்ற ஸாமங்களைப் பற்றிச் சொல்லப்படுகிறது.

## 6. யாகத்தில் சாமவேதம்

ஒவ்வொரு யாகத்திலும் ஹவிஸ்களால் பூஜிக்கப்பட்ட தெய்வங்கள் சாமவேதத்தினால் தான் சந்தோஷப்படுவதாகவும் அதனால் சாமவேத கோஷங்களைக் கொண்டு முடிக்கவும் முறை உள்ளது.

## 7. அமைதியான சாமவேதம்

மன நிம்மதி அடைந்தவர்களும் முக்த புருஷர்களும்கூட एतत्सामगायन् आस्ते என்று ஸாமத்தையே கானம் பண்ணுவதாகத் தைத்திரீய உபநிடதமும் கூறுகின்றது.

எந்தவித கார்யங்கள், வ்யவஹாரம், ஆகியவற்றில் வெற்றி அடையவும் அமைதியின்மை நீங்கவும் மனம் லயித்து வேண்டுவதற்கு அமைதியான வேதம் சாமவேதம். எல்லா பூஜைகள் செய்தாலும் மனம் ஒன்றி, கண் மூடி, கைகுவித்து வழிபடும் நிலையைப் பெற உதவுவது சாம கானமே. அமைதி, ஆனந்தம் கிடைப்பது மட்டுமின்றி மோக்ஷ சாதனமாகவும் விளங்குவதால் சாமவேதம் சிறந்தது.

## 8. மற்ற வேதங்களிலும் சாமத்தின் சிறப்பு

तस्य यजुरेव शिर: ऋग्दक्षिण: पक्ष: सामोत्तर: पक्ष: என்கிற இடத்தில் பக்ஷிக்கு முக்யாவயவம் பக்ஷம். அதாவது சிறகு. அதை மனதில் கொண்டு வேதம் சாமத்தைப் பக்ஷ (இறகு) மாகச் சொல்கிறது. அதிலும் உத்தர பக்ஷமாகச் சொல்கிறது.

## 9. சாமவேதத்தில் 1000 கிளைகள்

சாமவேதத்திற்கு மட்டும்தான் ஆயிரம் சாகைகள் - கிளைகள் உள்ளன. அதனாலும் சாமவேதம் மிக மிக உயர்ந்ததாகச் சொல்லப்படுகிறது.

## 10. புனித சடங்குகளில் சாமவேதம்

மேலும் சாமவேத கானம் செய்வதால் ச்ராத்தம் முதலான கர்மாக்கள் ஸபலமாவதாக- அதிக பயன் தருவதாக ஸ்ம்ருதிகள் சொல்கின்றன.

## 11. வேதியர்களுக்குப் பிறப்பிடம் சாமவேதம்

सामवेदो ब्रह्माणानां प्रसूति: । यजुर्वेदं क्षत्रियस्याहुर्योनिम् ऋग्भ्यो जातं वैश्यं वर्णमाहु: ।।

என்கிற இடத்தில் சாமவேதத்தின் சிறப்பு சொல்லப்படுகிறது.

## 12. ப்ரச்ன உபநிஷத்தில் சாம மஹிமை

ப்ரச்ன உபநிஷத்தில் ருக்வேதத்தால் இந்த உலகில், சிறப்பையும் யஜுர் வேதத்தினால் அந்தரிக்ஷ தேவலோக சுகத்தையும், சாம வேதத்தினால் ஓங்கார ப்ரஹ்ம தத்துவத்தையும் அடைகிறான் என்பதை,

ऋग्भिरेतं, यजुर्भिरन्तरिक्षं, सामभि: यत्तत्कवयो वेदयन्ते तमोंकारेणान्वेति विद्वान् यत्तत् शात्तं अजरं, अमृतं अभयं परञ्चेति ,

என்று சொல்லப்படுகிறது. இதையும்விடச் சிறப்பு வேண்டுமா !

## 13. சாமவேதமே பிதா

சாமவேதமே பிதா என்றும், ருக்வேதம் தாயாகவும் சொல்லப்படுகிறது ऋग्वै माता, साम पिता என்று யஜுர்வேத ப்ராம்மண யாகத்தில் சொல்லப்படுகிறது. அது போல் பித்ருக்களிடமிருந்தே தேவர் - அரக்கர்களும் தேவர்களிடமிருந்து சராசர ப்ரபஞ்சமும் தோன்றுகிறது என்று சொல்லப்படுகிறது.

இந்த உற்பத்தியைச் சொல்லும் வேதம் மனுஷ்யாதி சராசரத்தை படைக்கும் யஜுர் வேதத்தைவிட தேவதைகளை படைக்கும் ருக் வேதமும், அதற்கும் காரணமான தேவர்களைப் படைக்கும் பித்ருக்களை தேவதையாக கொண்ட சாமவேதமும் இன்னும் சிறந்தது என்றும் சொல்லப்படுகிறது.

## 14. சாமவேத கானசமயம் மற்ற வேதம் ஓதலாகாது

சாமவேதம் சொல்லும் போது மற்ற வேதங்களுக்கு அனத்யயனம் விதிக்கப்படுகின்றது.

## 15. சங்கீதத்திற்கு சாமவேதமே ஆதாரம்

மேலும் நாதோபாஸன மார்க்கத்திற்கும் பகவத் கீர்த்தனங்களால் ப்ரம்மத்தினிடத்தில் மனம் லயிப்பதற்கும் சாமவேதமே மூலகாரணமாக உள்ளது. அது போல் தனுர்வேதம் - யஜுர் வேதத்திற்கும், ஸ்தாபத்யம் (சில்பம்) ருக் வேதத்திற்கும், ஆயுர் வேதத்திற்கும் அதர்வண வேதமும் இருப்பது போல், சாமவேதத்திற்கு காந்தர்வ வேதம் உபவேதமாக உள்ளன.


ஸப்த ஸ்வரங்கள் தீர்க்கம், வினதம், ப்ரேங்கம் போன்ற ஸ்வரபேதங்கள்; ப்ரக்ருதி ஆரணம் எனும் மூலபாகமும் ஊஹம் - ரஹஸ்யம் எனும் உத்தரபாகமும் இவைக்கு ஆதாரமான பூர்வார்சிக உத்ரார்சிக 'ருக்'பாகங்களும் இதற்கு கேன உபநிஷத் சாந்தோக்யம் எனும் உபநிஷத் பாகமும், ச்ரௌத பாகமும் கிருஹ்ய பரிசிஷ்டமும் வேத பாஷ்ய ஸ்தோப பாஷ்யங்களும் கொண்டது சாமவேதம்.

## 16. முடிவுரை

பலவித கர்ம கலாபங்களால் பகவானை ஆராதிக்கும் 'யஜுர்' வேதம் எல்லோருக்கும் பூர்ணமான நிறைவைத் தரும். பகவானையே முற்றிலும் துதிக்கும் 'ருக்வேதம்' இன்னும் உருக்கமானது. பகவானைப் பாடி ஆனந்தப்படும் சாமவேதம் மிகவும் உத்தமமானது. இவ்வாறு சாமவேத மஹிமை கூறுகிறது. எல்லா இதிஹாஸ புராண ஸ்ம்ருதி தர்ம சாஸ்திர உபநிஷத்வேத ப்ரமாணங்களால் ஈடு இணையற்றது என சாமவேதத்தைப் பற்றிச் சொல்லப் படுகிறது.

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி

**ஸ்ரீ ஏ.கே. ரங்கநாத ஐயர்**



ஸ்ரீ ஏ கே ரங்கனாத ஐயர் சென்னைக்கு அடுத்த திருமங்கலம் க்ராமத்தில் ஓடு தயார் செய்து வ்ருத்தி அடைந்தவர். முதலில் செங்கல் தயாரித்து வந்தார். 1932 ஆம் வருடம் பெரியவா அந்த ஊருக்கு எழுந்தருளினார். அருகில் இருந்த கோயம்பேடு க்ராமத்தில் பெரியவா தங்கியிருந்த போது ஐயர் அவரை அணுகி ஓடு ஆலை வைக்கலாமா சர்க்கரை ஆலை வைக்கலாமா என்று கேட்டு எந்த இடத்தில் வைப்பது என்றும் கேட்டார். பெரியவா திருமங்களத்திற்கு சவாரியில் சென்றார்.

அப்போது அங்கு செல்ல கூவம் ஆற்றைக் கடக்க வேண்டும். பாலம் கிடையாது. நூற்றுக்கும் அதிகமான தொழிலாளர்கள் சவுக்குக் கழிகளை நட்டு சவாரியை பத்ரமாக அழஹித்துச் சென்றனர். பெரியவா அங்கு சென்று ஓரிடத்தைச் சப்பாத்தி புதரின்றி சுத்தம் செய்யச் சொன்னார்கள். அங்கே ஓர் அற்புதம்.

ஒரு சுதர்சன யந்த்ரம் இருந்தது. அதை ஐயரிடம் காண்பித்து ஓடு செய்ய உத்தரவு இட்டார்கள். ஓடு மக்களுக்கு நிரந்தரமாக நிழல் தரும் என்னும் காரணம்தான். தொழிலும் நன்றாக வ்ருத்தி அடைந்தது.

ஒரு சமயம் சென்னையில் ஏழைகளின் குடிசைகள் தீப்பற்றி எரிந்தன. அப்போது முதலமைச்சர் அண்ணாதுரை விரும்பியபடி பல லக்ஷம் ஓடுகள் தானமாக ஏழைகளுக்குக் கொடுக்கப்பட்டன. பெரியவாளின் வாக்கினால் எவ்வளவு பேருக்கு நல்லது நடந்தது என்று புரிந்தது.

பழனிச்சாமி என்ற ஹரிஜன முனிசிபல் கவுன்சிலர் பெரியவாளைத் தர்சிக்க திருமங்கலம் வந்தார். அவர்கள் சமுதாயம் வழிபட பெரியவா ஒரு கோவிலை கட்டிக்க ஒடுகள் கேட்டார். விடை பெறும் போது பெரியவாளிடமிருந்து உதிர்ந்த ரோஜா மாலைப் பூக்களை அவை உதிர்ந்த மண்ணுடன் எடுத்துச் சென்றார்.

பெரியவா உடனே நுங்கம்பாக்கம் டி எஸ் ராமசாமி ஐயர் என்ற பக்தரிடம் சொல்லி ரங்கனாதரிடம் கோவில் கட்டப் பணித்தார். 1944 ஆம் ஆண்டு காஞ்சீ காமாட்சி அம்மன் கோவிலை புதுப்பிக்க உத்தரவாயிற்று. அதை ஜம்புலிங்க நாயகர் என்பவரிடம் வரை கலையைச் செய்யச் சொன்னார். பாலசுப்ரமண்ய ஐயரிடம் வரவு செலவு கணக்குகளைப் பார்க்கச் சொன்னார்.

சுப்ரமண்ய ஐயர் என்பவர் engineer ஆக பணி ஆற்றினார். இந்த நால்வரும் திருக் கோவிலை அக்கறையுடன் புதுப்பித்தார்கள். தகுந்த ஆட்களை பணிக்கு அமர்த்துவதில் அவருக்கு நிகர் அவரே. ஸ்ரீ ரங்கநாத ஐயர் என்னுடைய பிதா. அந்த மஹானின் அனுக்ரஹம் எங்கள் குடும்பத்திற்கு கிடைத்தது எங்கள் பாக்யமே.

## இன்னொரு ஸம்பவம்

சென்னையில் மகாபெரியவரின் பக்தர்கள் நிறைய உண்டு. அவர்களுள் முக்யமான ஒரு நபருடன் குணசித்ர நடிகர் எஸ். வி. சுப்பைய்யா விற்குப் பழக்கம் உண்டு. சுப்பைய்யா கேட்டதற்கிணங்க அவரை ஸ்ரீ மடத்திற்கு அழைத்துச் செல்வது வழக்கம். ஒவ்வொரு தடவையும் சுப்பைய்யா தர்சிக்காமல் எட்ட நின்று விடுவார். வற்புறுத்தினாலும் அருகில் வர மாட்டார். இது பெரியவாளின் கவனத்திற்கு வந்திருக்கிறது.

ஒரு நாள் அவரை அழைத்து வந்தவரிடம் ''அவர் ஏன் அங்கேயே நிற்கிறார்'' என்று வினவ சுப்பைய்யவைப் பற்றி விவரங்கள் தந்தார். ஸ்வாமிகள் சுப்பையாவை அருகில் வரச்சொல்லி ஆசீர்வதித்துப் ப்ரஸாதம் அருளினார்கள். அதுமுதல் ஆசார்யரின் கருணைக்குப் பாத்ரமானார்.

வட திசையை நோக்கி பெரியவா யாத்ரை தொடங்கினார். சென்னையை விட்டு சோழவரத்தைத் தாண்டி நெல்லூர் நெடுஞ்சாலை வழியே காரனோடை என்னும் இடத்தை நெருங்கினார்கள். ஸ்வாமிகள் பின்னால் வந்த ஒரன்பர் ஸ்வாமிகளிடம் ஓரமாக இருக்கும் நஞ்சை நிலங்களைக் காட்டி இதெல்லாம் நடிகர் சுப்பைய்யாவினுடையது.

கோடியில் இருப்பது அவரது குடியிருப்பு என்றார். அடுத்த நிமிஷம் வரப்புகளைக் கடந்து பெரியவா அவ்வீடு நோக்கிச் சென்றார்கள். சுப்பையாவிற்கு அவர் கேட்காலே கிடைத்த பாக்யம். மார்கழி மாதம் முழுவதும் அங்கேயே தங்கி தைப்பொங்கல் முடிந்த பின்னரே யாத்ரையை தொடங்கினார்கள். பிறவிப்பயன் அடைந்து விட்டதாகவே சுப்பைய்யா மகிழ்ச்சி அடைந்தார்.

(வளரும்)


## ‘‘ஸ்ம்ருதி முக்தாபலம்’’ என்னும் வைத்தியநாத தீக்ஷிதீயம்

அரிய தர்மசாஸ்திர புத்தகத் தொகுப்பு எளிய தமிழ் உரையுடன் வெளியிடப்பட்டுள்ளது.

1. வர்ணாஸ்ரம தர்மகாண்டம், 2. ஆஹ்னிககாண்டம் பூர்வபாகம், 3. ஆஹ்னிக காண்டம் உத்தரபாகம், 4. ஆசௌச காண்டம், 5. ஸ்ராத்தகாண்டம் பூர்வபாகம், 6. ஸ்ராத்த காண்டம் உத்தரபாகம், 7. திதிநிர்ணயகாண்டமும் ப்ராயச்சித்த காண்டமும் என்ற 7 பாகங்கள் சேர்த்து மிகக்குறைந்த விலையில் கிடைக்கப் பெறுகின்றது. ஆஸ்திக அன்பர்கள் அனைவரும் வாங்கி பயன் பெறலாம்.



ஏழு தொகுதிகள் அடங்கிய ஒரு செட் விலை 2500

கூரியர், தபாலில் பெற மேலும் 500 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்

தொடர்பு கொள்ளவேண்டிய அலைபேசி எண்கள்

9600543996, 7904244054, 9003845456, 9710765203

குறிப்பு :

**இந்தத் தொகுப்பு ஸ்ரீ மடம் புக் ஸ்டால் மற்றும் ஸ்ரீ பெரியவாள் முகாமிலும் கிடைக்கும்**

# புராணக் கதை

காஞ்சி வாதூலன்

பௌராணிகர் '' இப்போதெல்லாம் காரணமே இல்லாமல் விவாக ரத்து நடக்கிறது. எந்த காரணம் கொண்டும் மனைவியை கைவிடுவதென்பது மகா பாபம். சாஸ்த்ர விரோதம். பரஸ்பரம் கருத்து ஒத்தவர்களாகவும் ஒருத்தரை ஒருத்தர் கைவிடாமல் இருக்கவும் தான் வேத மந்த்ரங்கள் வலியுறுத்துகின்றன. இதற்கு ஒரு ரஸமான கதை உண்டு என்று சிஷ்யனைப் பார்த்துக் கூறலானார் .

அந்த காலத்தில் பௌர ஜனங்கள் மகிழ்ச்சியாக இருந்தார்கள் என்றால் அரசனின் ராஜ்ய பரிபாலனம் செவ்வனே இருந்தது என்று பொருள். உத்தானபாதனின் பேரன் உத்தமன் ஆக்ஷி அப்படித்தானிருந்தது. உத்தம்மாகவே இருந்தது. பப்ரு என்னும் அரசனின் பெண் பாஹுலாவை திருமணம் செய்து கொண்ட அவன் அவள் மீது மிகவும் பிரியம் வைத்தான். மற்ற விஷயங்களைக் காட்டிலும் அவளை மகிழ்விப்பதே முதல் வேலை . ஆனால் அவளோ ஒரு சிடு மூஞ்சி. எவ்வளவுக்கு எவ்வளவு அவன் ப்ரியம் வைத்தானோ அவ்வளவுக்கு அவ்வளவு அவனைப் புறக்கணித்தாள். ஸந்தோஷிக்கவே இல்லை. ஒரு நாள் ஒரு விழாவில் அனைவரும் கூடியிருக்கையில் அவளுக்கு மத்ய பானத்தை அன்புடன் தந்தான். அவளோ அனைவரின் எதிரில் அதைப் புறக்கணித்தாள். மனம் வெதும்பிய அரசன் அவளைக் காட்டில் விட்டுவிடப் பணித்தான். ஆனால் அவன் மனம் தடுமாறியது. சில நாட்கள் அவள் நினைவாகவே இருந்த அவன் மெல்ல மெல்ல மாறத் தொடங்கினான்.

ஒரு நாள் அவனது அரசவைக்கு ஓர் அந்தணன் வந்தான். அவன் பெயர் சுசர்மா. அரசனிடம் தன் மனைவியை யரோ கடத்திக் கொண்டு போய்விட்டதாகவும் அவளை மீட்டுத்தருமாறும் வேண்டிக் கொண்டான். அவள் ரூபமென்னை, எப்படிப்பட்டவள் என்று கேட்க அவன் அவள் கொஞ்சம் குரூபி, சிடுமூஞ்சியும்கூட என்றான். அரசன் அவனிடம் தன் நிலையிலேயே அவனிருப்பதைப் பார்த்து வேறு அழகிய பெண்ணை ஏன் மணக்கவில்லை என்று கேட்க அவன் அது சாஸ்த்ர விரோதம். மனைவி எப்படிப் பட்டவளாயிருந்தாலும் அவளைக் கை விடக்கூடாது. அவளில்லாமல் என்னால் எந்த அக்னி கார்யமும் செய்யமுடியவில்லை என்றான். அரசனுக்கு வெட்கமாகப்

போய்விட்டது. எனினும் அவளைத் தேட அரசன் சென்றான். வழியில் ஒரு முனிவரின் ஆஸ்ரமம் அவனை ஈர்த்தது. அங்கிருந்த முனிவர் தன் த்யானத்தால் அவன் மனைவியை கைவிட்டவன் என்று அறிந்து அவனிடம் முழு வரவேற்பை அளிக்கவில்லை. அவனிடம் அவர் மனைவி எப்படிப்பட்டவளாயிருந்தாலும், கணவன் கை விடக் கூடாது, அதுபோலவே கணவன் எப்படிப்பட்டவனாயிருந்தாலும் கை விடக்கூடாது. மனமொத்த வாழ்க்கையைத் தான் வேத சாஸ்த்ரங்கள் சொல்கின்றன என்று அதிர்ச்சியைக் கொடுத்தார். பின்பு அந்தணனின் மனைவி பலாகன் என்னும் அரக்கனால் கொண்டு போகப்பட்டு உத்பாலவடம் என்னும் வனத்தில் உள்ளாள் என்றார்.

அந்த வனத்தில் அந்தணனின் மனைவியை அந்த அரக்கன் பலாத்காரமும் செய்யவில்லை. இம்சையும் தரவில்லை. அரசனைக் கண்ட அரக்கன் நர மாம்சம் உண்பவர்கள் நாங்கள் அல்லர். மனிதர்களின் துர் சிந்தயை உண்பவர்கள் என்று கூறி அந்தணன் யாகங்களை நடத்தினால் அவர்களுக்கு உணவு வராமல் போகும், அவரது மனைவியைக் கடத்தினால் யாகம் நின்று போகும். உணவு கிடைக்கும் எனவேதான் இந்த கடத்தல் என்றான். மேலும் அவரது மனைவியின் துர்சிந்தனையை உண்டுவிட்டோம் அவள் சுத்தை என்றான். அரசன் உத்தமன் தன் தவறை உணர்ந்தான். ரிஷியின் மூலம் பாஹுலா பாதாள லோகத்தில் கபோடகன் என்னும் நாகனால் காப்பாற்றப்பட்டு வருகிறாள் என்று தெரிந்து ''மித்ரவிந்தம்'' என்னும் யாகத்தை அந்தணனைச் செய்யச் சொன்னான். யாக முடிவில் அரசி அர்சனை நேசிக்கவும் சிடு மூஞ்சியற்றவளாகவும் மாறினாள். இனிதே அனைத்தும் நடந்தது என்று கூறி ஓய்ந்தார் பௌராணிகர்.

(தொடரும்)

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலமட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம்.
டாக்டர் வே. ராகவன் தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம்.
மொழி பெயர்ப்பாளர் ஜயவிஜயா

## ஸ்ரீ க்ருஷ்ணனின் தூத வாக்யம்



க்ருஷ்ணனின் விஸ்வரூபத்தைப் பார்த்து நடு நடுங்கி அஞ்சலி பத்தராய் நமஸ்கரித்து துதித்தனர். க்ருஷ்ணரும் தன் உண்மையான தோற்றத்தை எடுத்து நிற்க த்ருதராஷ்டிரன் கூறினான்.

த்ருதராஷ்டிரன் க்ருஷ்ணா என் புத்ரர்கள் மீது என் பலம் என்னவென்று கண்டிருப்பாய். அது இதையெல்லாம் பார்த்திருக்க விளங்கி யிருக்கும். உனக்குத் தெரியாதது இல்லை. என்னுடைய இந்த துர் ஸ்திதியைப் பார். என்னை பழிக்காதே.

க்ருஷ்ணர் அவையில் இருக்கும் பெரியோர்களே அரசனே உங்கள் முன்னால் நடந்த அவலத்தைப் பார்த்தீர்கள். அறிவிலி மூடன் துர்யோதனன் அவையை அவமதித்து வெளியேறுகிறான். இந்த அரசன் புத்ரர்கள் மீது எனக்கு சக்தியில்லை எங்கிறான். நான் உங்களிடமிருந்து விடை பெறுகிறேன். கௌரவர்கள் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே க்ருஷ்ணர் வெளியேறினார். குந்தியின் வீட்டிற்குச் சென்றார். க்ருஷ்ணர் அத்தை துர்யோதனனுக்கு பலவிதமாக நல் வார்த்தைகள் சொன்ன போதும் அவன் கேட்பதாயில்லை. நான் யுதிஷ்டிரனைப் பார்க்கப் போகிறேன். பாண்டவர்களுக்கு என்ன செய்தி சொல்லட்டும்?

குந்தி — தர்மாத்மா யுதிஷ்டிரனே வீரர்களான உங்களைப் பெற்றும் அன்யன் வீட்டில் சோற்றுக்குக் காத்திருகிறேன்? ராஜ தர்மத்துடன் போரிடுங்கள். உங்கள் க்ஷத்ரிய தர்மத்தைக் காட்ட ஸந்தர்பம் வந்துவிட்டது. உன் பாதை நன்றாக இருக்கட்டும். சென்று வா. புத்ரர்களைக் காப்பாற்று. வெளியே வந்த க்ருஸ்ணர் தன் சாரதி ஸத்யகியுடன் கர்ணனைப் பார்க்கச் சென்றார்.

க்ருஷ்ணர் — ஹே கர்ண என்னுடன் வரும் உன்னை பாண்டவர்களின் மூத்தவன் என்று அவர்கள் அறியட்டும். தெரிந்தவுடன் உன் தாள் பணிவர். உனக்கு மகுடாபிஷேகம் செய்வேன். குந்தியையும் மகிழ்விப்பாயாக.

கர்ணன் — க்ருஷ்ணரே நான் அனைத்தையும் அறிவேன். குந்தி கன்னியாய் இருக்கையில் ஸூர்யன் மூலமாய் என்னை ஈன்றாள். அபாக்யவானான நான் அவளால் கைவிடப்பட்டேன். இந்த அதிரதன் தான் என்னை வளர்த்தான். இவன் மனைவிக்கு என்னை கண்டபோது தான் பால் சுரந்தது. அவர்களது அன்புக்காக அவர்களே என் பெற்றோர்கள். எனக்கு மனைவிகள் புத்ர பௌத்ரர்கள் உள்ளனர். அவர்களுடன் நான் அன்பைப் பொழிகிறேன். பெரும் செல்வத்திற்காகவோ, ராஜ்ய ஆசையினாலோ அச்சத்தாலோ நான் அவர்களுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்யேன். இந்த அகண்ட ராஜ்யத்தை நான் அனுபவிக்கிறேன். துர்யோதனனால் தரப்பட்ட ராஜ சுகம் இது. அவனுக்கு எப்போதும் த்ரோகம் செய்யேன். அர்ஜுனனுடன் நான் போரிடவில்லையெனில் எங்கள் இருவருக்கும் அது களங்கம். நான் தான் பாண்டவர்களின் மூத்த புத்ரன் என்று தர்மர் அறிந்தால் ராஜ்யத்தை ஏற்கமாட்டார். நீ கூறியபடி ராஜ்யம் கிடைத்தாலும் அதை துர்யோதனுக்கே கொடுப்பேன். இந்த ராஜ்யத்திற்கு தர்மரே நிரந்தரம் அரசனாகட்டும். ஹ்ருஷீகேச அர்ஜுனனை யுத்தத்திற்கு அழைத்து வா. இந்த ஸம்பாஷணையை ரகஸ்யமாக வைத்துக் கொள், உன் விருப்பப்படி செய். இப்படி தன் எண்ணத்தைக் கூறிய கர்ணன் க்ருஷ்ணரை ஆரத்தழுவி அவருக்குப் போக விடை கொடுத்தான்.

(தொடரும்)

# ஸனாதன தர்மம் :

ரா ஸ்ரீ

**213. கேள்வி : மனிதன் எதையெல்லாம் செய்யலாம்? எதையெல்லாம் செய்யக் கூடாது ?**




71. முடியாததைச் செய்ய முயலக்கூடாது.

72. சக்தியுள்ளவனானாலும் ஆசாரத்தை விடக் கூடாது.

73. கெட்ட வார்த்தைகளைப் பேசக்கூடாது

74. ஆத்ம குணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

75. நம்பினவரைக் கைவிடக் கூடாது.

76. பிதாவும் புத்ரனும் ஒரே நாளில் க்ஷவரம் செய்துகொள்ளக் கூடாது.

77. கோள் சொல்லக் கூடாது. அதை உத்சாகப் படுத்தவும் கூடாது.

78. ஆயுள், தனம், க்ருஹ மனஸ்தாபம் வரவு மருந்து தானம் இவைகளை வெளியில் சொல்லக் கூடாது.

79. தனக்கு எது கெடுதியோ அதை பிறருக்குச் செய்யக் கூடாது.

80. எவ்வாத்தையைச் சொன்னால் நல்லோர் பழிப்பரோ அதைச் சொல்லக் கூடாது.

81. க்ரூர புத்தி உடையவனாய் இருக்கக் கூடாது.

**224. கேள்வி : உத்பவனம் என்றால் என்ன?**

**பதில் :** வஸ்த்ரத்தால் மூடப்பட்ட ஒரு பாத்ரத்திலிருந்து இன்னொரு பாத்ரத்தில் த்ரவத்தை ஊற்றுவதற்கு உத்பவனம் என்று பெயர்.

225 **கேள்வி :** ஸம்ஹதம் என்பது என்ன?

**பதில் :** படுக்கை, ஆஸனம், வாஹனம், கம்பலம், வஸ்த்ரம் இவை ஸம்ஹதம் எனப்படும்.

226. **கேள்வி :** எவை எப்போதும் சுத்தம்?

**பதில் :** உப நயனத்திற்கும் முன் பாலகன், கன்யா ஸ்த்ரீ, எலி, ஈ, தான்யத்தில் உள்ள புழு, பசு, குதிரை, யானை, ஆடு, கிளி, ஜல ஜந்துக்கள் இவை இயற்கையிலேயே சுத்தமானவை.

227. **கேள்வி :** ப்ராயஸ்சித்தம் என்றாலென்ன?

**பதில் :** நிச்சயமாகச் செய்யப்படும் தவத்திற்கு பெயர்.

228. **கேள்வி :** இதை யார் செய்வது?

**பதில் :** செய்ய வேண்டிய கர்மாக்களை செய்யாமல் இருந்தாலும், செய்யக் கூடாத கர்மாக்களைச் செய்தாலும் ப்ராயச்சித்தம் செய்ய வேண்டும்.

229 **கேள்வி :** பாபங்கள் எத்தனை விதம் ?

**பதில் :** ஒன்பது விதம், மஹா பாதகம், அதிபாதகம், உபபாதகம், ஸம பாதகம், ஸங்கரீ கரணம், மலினீகரணம், அபாத்ரீகரணம், ஜாதிப்ரம்ச கரணம், ப்ரகீர்ணம்.

(தொடரும்)

இனி கவலை வேண்டாம். 50, 70, வருடங்களுக்கு முன் உள்ள பழைய
(Reprint or Letterpress Books)
ஸம்ஸ்க்ருத, தமிழ், க்ரந்தம், கந்நடம், தெலுங்கு, etc.
ஆகிய எல்லா மொழிகளிலுள்ள புத்தகங்களை
புதிய Fontல் அச்சிட்டுதரப்படும்.
(Without Re-typeing, no proof reading)
விவரங்களுக்கு : V.K.N. Enterprises, Mylapore,
Chennai-600004, Cell : 9840217036, vknprinter@gmail.com
*We reprint old books without retyping ! Books of 50,70 etc. years can be reprinted with new fonts in all languages.
Sanskrit, Tamil, Grantham, Telugu, English, Kannada, Malayalam, Hindi etc.
Contact above address.*

# வேதோ நித்யம் அதீயதாம்

## உபநயனமான அந்தண மாணவர்களுக்கு முக்கிய அறிவிப்பு

"ஜந்தூனாம் நரஜன்ம துர்லபம்
அத: பும்ஸ்த்வம் ததோ விப்ரதா"

என்று ஸ்ரீ சங்கர பகவத்பாதர் தன்னுடைய விவேக சூடாமணி என்னும் நூலில் குறிப்பிடுகின்றார். "அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" என்று ஔவையாரும் இதே கருத்தை கூறுகிறார். அந்தண குலத்தில் பிறந்த அனைவரும் வேதாத்யயனம் செய்ய வேண்டும் என்பது நியதி. இந்த நியதியை பல சிரமங்கள் வந்த பொழுதும் நமது முன்னோர்கள் கடைபிடித்து வந்துள்ளனர். ஆனால் தற்பொழுது உள்ள சமுதாய சூழ்நிலைகளால் இந்த அவிச்சின்னமான வேத பரம்பரையில் தொய்வு ஏற்பட்டுள்ளது. இதை சரிசெய்து மீண்டும் இந்த வேத பரம்பரையானது தழைத்தோங்க வேண்டும் என்பதற்காகத்தான் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் பல ஊர்களில் பல வேத பாடசாலைகள் ஸ்தாபித்து நடத்தி வருகின்றார்கள்.

தற்போதைய சூழ்நிலையில் பள்ளி படிப்பும் மிக முக்கியமான ஒன்றாக மாறிவிட்டதால் வேதாத்யயனம் செய்து கொண்டே பள்ளியிலும் படித்து தேர்ச்சி பெறுவதற்கான வாய்ப்பும் ஸ்ரீ சங்கர மடம் மூலம் பல இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் தற்பொழுது காஞ்சிபுரத்தில் உள்ள ஸ்ரீ தண்டபாணி ஓரியண்டல் பள்ளியில் பள்ளி படிப்பும், அதோடு சேர்ந்து வேதம், சம்ஸ்க்ருதம், மற்றும் நமது சம்ப்ரதாய பழக்க வழக்கங்களையும் கற்றுக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் தமிழ்மொழியில் உள்ள பக்தி இலக்கியங்களும், நீதி நூற்களும் கற்பிக்கப்படும்.

இதன் சிறப்பம்சம் என்னவென்றால் இத்திட்டத்தில் சேர்ந்து பயிலும் மாணவர்களுக்கு தமிழ் மற்றும் ஆங்கிலம் இரு வழிகளிலும் பயிற்சி தரப்படும். கல்வி, உணவு, தங்குமிடம் எதற்கும் கட்டணம் கிடையாது. 10 வயது முதல் 13 வயது வரையுள்ள உபநயனமான மாணவர்கள் சேர்க்கைக்கு விண்ணப்பிக்கலாம். பள்ளி படிப்பு முடிந்ததும் கல்லூரி படிப்புக்கு ஏற்பாடு செய்து தரப்படும்.

பெற்றோர்கள் இந்த பொன்னான வாய்ப்பை பயன்படுத்திக்கொண்டு தங்கள் குழந்தைகளுக்கும் நமது சமுதாயத்திற்கும் வளமான எதிர்காலம் அமைய ஒத்துழைப்பு அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய எண்கள்

R.வெங்கடசுப்ரமண்யன் :8903015221
V.P.ஸ்ரீனிவாசன் : 9445104873
G.பிரசாந்த் : 8056375421
K.ஸ்ரீராம் : 9894775434